
தொகுதி 6, பதிப்பு 24

ஜூன் 16-30, 2026

இலவச விநியோகத்திற்கு

# நியூ இந்தியா சமாச்சார்




மின்-நகலுக்கு



12-ஆவது சர்வதேச யோகா தினம்

## ஆரோக்கிய உலகிற்குக் காலத்தால் அழியாத இந்தியாவின் சூத்திரம்

உடல், மனம், ஆன்மீக நல்வாழ்வுக்கு உலகளாவிய கொண்டாட்டமான சர்வதேச யோகா தினம், பல்வேறு நாடுகளையும் கலாச்சாரங்களையும் சேர்ந்த மக்களை இணைக்கும் சக்திவாய்ந்த ஓர் இயக்கமாக உருவெடுத்துள்ளது. இன்று, இந்தியாவின் இந்தப் பண்டைய கொடை உலகளாவிய இயக்கமாக வளர்ந்து, சிறப்பான பொது சுகாதாரம், மன அமைதிக்கான புதிய பாதையை வழங்கியுள்ளது.

Follow us @NISPIBIndia



# புகழ்பெற்ற சோழப் பேரரசு: வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் பெருமை

ஒவ்வொரு மாதமும், புகழ்பெற்ற வானொலி நிகழ்ச்சியான 'மனதின் குரல்' நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான செய்திகளைப் பெறுகிறது. இந்த நிகழ்ச்சியின் மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடி பொதுமக்களை மையமாகக் கொண்ட உரையாடலைக் குடிமக்களுடன் நிகழ்த்துகிறார். 2026 மே 31 அன்று ஒலிபரப்பப்பட்ட 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் 134-வது பகுதியில், கோடை வெப்பத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளைப் பகிர்ந்து கொண்ட பிரதமர் திரு மோடி, உடலை நீர்ச்சத்துடன் வைத்திருக்குமாறு மக்களை அறிவுறுத்தினார். மேலும், சோழப் பேரரசின் செழுமையான வரலாறு, கலாச்சாரம் உள்ளிட்ட பல முக்கியத் தலைப்புகள் குறித்தும் அவர் பேசினார். 'மனதின் குரல்' நிகழ்ச்சியிலிருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கே.

- தேசிய சாதனைகள்: தேசிய சீனியர் தடகளக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்றது. நாடு முழுவதிலுமிருந்து சுமார் 800 தடகள வீரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இப்போட்டியின் போது, நான்கு வெவ்வேறு போட்டிகளில் நான்கு தேசிய சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

- வெப்பத்திலிருந்து பாதுகாப்பு: தற்போது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. சுட்டெரிக்கும் வெயில், வெப்பக் காற்று ஆகியவற்றுடனான காலநிலையில் உங்களைச் சரியாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். அதிக அளவு தண்ணீர் பருகி உங்கள் உடலை நீர்ச்சத்துடன் வைத்திருங்கள். நீங்கள் வெயிலில் வெளியே செல்ல வேண்டியிருந்தால், எச்சரிக்கையுடன் செல்லுங்கள். அதுமட்டுமின்றி, வெப்பப் பாதுகாப்பு குறித்து அரசுத் துறைகள் வெளியிட்டுள்ள பல்வேறு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை மறக்காதீர்கள்.

- சத்து சர்பத்: பீகார், ஜார்க்கண்ட், கிழக்கு உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சத்து சர்பத் மிகவும் அற்புதமானது. இது வயிற்றை நிரப்புவதுடன் வலிமையையும் அளிக்கிறது.

- சோழர்காலச் செப்பேடுகள்: நெதர்லாந்து நாட்டிற்குச் சென்றிருந்தபோது, ஒவ்வொரு இந்தியரையும் பெருமையில் ஆழ்த்திய ஒரு தருணம் அமைந்தது. அங்கு நடைபெற்ற ஒரு சிறப்பு விழாவின் போது, சோழர் காலத்தைச் சேர்ந்த பழங்கால செப்புப் பட்டயங்கள் மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

- வானியல்: நம் நாட்டில், வானியல் துறை ஒவ்வொரு தலைமுறையினரிடமும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. இது ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்கமளித்துள்ளது; இன்றைய இளைஞர்களிடம் இதற்கான பெரும் ஆர்வம் காணப்படுகிறது.

- கங்கை டால்பின்கள்: டால்பின் மீட்பு ஆம்புலன்ஸ் நடமாடும் ஒரு மருத்துவமனையாகச் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. டால்பின்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஆக்சிஜன் வசதி, தனிவகையான ஸ்ட்ரெச்சர்கள், மீட்புக் கருவிகள் உள்ளிட்ட வசதிகள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் மூலம், ஒரு டால்பின் காயமடைந்தாலோ அல்லது கால்வாயில் சிக்கிக் கொண்டாலோ, அதற்கு உடனடி சிகிச்சை வழங்க முடியும்.

- பல்லுயிர் பெருக்கம்: நாம் கங்கையில் டால்பினைக் காப்பாற்றும்போது, வெறும் ஓர் உயிரினத்தை மட்டும் காப்பாற்றவில்லை; கங்கை நதியின் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கிறோம். நாம் நதியின் ஒட்டுமொத்த சுற்றுச்சூழலையும் அமைப்பையும் நாம் பாதுகாப்பதுடன், நமது எதிர்காலத் தலைமுறையினருக்காக விலைமதிப்பற்ற இயற்கைப் பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறோம்.

- சேவைக்குப் பெருமளவு நிதியாதாரங்கள் தேவையில்லை: கேரள மாநிலம் ஆலுவாவில், திரு சாஜி வாலஷேரில் 15,000-க்கும் அதிகமானோருக்கு நீச்சல் கற்றுத்தந்துள்ளார். ஒரு படகு விபத்தில் பல மாணவர்கள் உயிரிழந்ததால் ஏற்படுத்திய வேதனையைத் தொடர்ந்து அவர் இந்த முயற்சியைத் தொடங்கினார். சேவை செய்வதற்கு ஒருவருக்குப் பெருமளவு நிதியாதாரங்கள் தேவையில்லை. அதற்கு உண்மையில் தேவைப்படுவது உன்னதமான எண்ணமும் தளராத முயற்சியும்தான் என்பதை அவரது வாழ்க்கை நமக்குக் கற்றுத்தருகிறது.

- தேசபக்தி உணர்வு: திருமதி கிரிஜா அம்மாள் சுமார் 15 பள்ளிகளை நடத்தி வருகிறார், அவற்றில் சென்னையில் உள்ள ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா பள்ளி ஒரு முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. இவரது தேசபக்தி உணர்வு ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

- மக்கள் சக்தி: இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் ஏதேனும் ஊக்கமளிக்கும் ஒரு விஷயம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. பெரும்பாலும், இந்த முயற்சிகள் பரவலான கவனத்தைப் பெறுவதில்லை; இருப்பினும், நாம் இவற்றை அறியும்போது, நமது நாடு மக்களின் கூட்டு வலிமை மூலம் வளர்ச்சியடைந்து வருகிறது என்ற நமது நம்பிக்கை மேலும் வலுப்படுகிறது.

- நற்செயல்கள்: உங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் இதுபோன்ற முயற்சிகளைத் தீவிரமாகக் கவனிக்குமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன். சமூகத்திற்காக நல்ல பணிகளைச் செய்து வருபவர்களை அடையாளம் காணுங்கள்; அவர்களின் முயற்சிகளை அங்கீகரித்துப் பாராட்டுங்கள், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், முடிந்தால் நீங்களும் ஓர் உன்னதமான நோக்கத்தில் இணைந்து பங்களிப்பை வழங்குங்கள்.

மனதில் குரல் நிகழ்ச்சியைக் கேட்க க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

NEW INDIA
SAMACHAR
VOLUME 6, ISSUE 24 | JUNE 16-30, 2026



EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR


SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
ABHAY GUPTA
SATYAM SINGH



**CLICK TO READ**
**NEW INDIA SAMACHAR**
**AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'



# உள் பக்கங்களில்...



அட்டைப் பக்கக் கட்டுரை

**இந்த ஆண்டு ஜூன் 21 அன்று 12வது சர்வதேச யோகா தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இது உண்மையில் சிறப்பான தருணமாகும். இந்த ஆண்டு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் 12 ஆண்டுகள் நிறைவடைவதையும் குறிப்பதால், ஜூன் மாதம் கொண்டாட்டங்களின் மாதமாக மாறியுள்ளது.** | 8–17

பத்ம விருதுகள் 2026



## நாட்டின் நாயகர்களைக் கௌரவித்தல்...



**பத்ம விருதுகள் வழங்கும் விழா 1–ன் போது, நாட்டின் 66 சிறந்த ஆளுமைகளுக்கு 2026–ம் ஆண்டிற்கான பத்ம விருதுகள் வழங்கப்பட்டன.**
22–27


*செய்திச் சுருக்கம்* | 4–5

*ஆளுமை: திருமதி வினிதா சோரன்*
*எவரெஸ்ட் சிகரத்தை வென்ற முதலாவது இந்தியப் பழங்குடி பெண்* | 16

*தொடர் கண்காணிப்பு மற்றும் பொது மக்கள் பங்களிப்பிற்கு முக்கியத்துவம்*
*பிரதமர் திரு மோடி தலைமையில் 51–வது பிரகதி கூட்டம் நடைபெற்றது* | 7

*இளைஞர்களின் தொடர்ச்சியான முன்னேற்றம்:*
*வளர்ச்சியடைந்த இந்தியாவின் வலிமையை அதிகரிக்க வேலைவாய்ப்பு திருவிழாவில்*
*51,000–க்கும் கூடுதலான பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன* | 18–19

*உணவுப் பாதுகாப்பு மற்றும் தூய்மையான போக்குவரத்திற்குப் புதிய ஊக்கம்*
*மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்* | 20–21


## ஜரோப்பாவிலிருந்து வளைகுடா வரை:
## இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய சக்தியின் வெளிப்பாடு

ஐக்கிய அரபு அமீரகம் , நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பிரதமர் திரு மோடி மேற்கொண்ட பயணங்கள், இந்தியாவின் புதிய உலகளாவிய உத்தியின் சக்திவாய்ந்த வெளிப்பாடாக அமைந்துள்ளன.
|28-32




**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

## ஆசிரியரின் மேசையிலிருந்து...

# யோகா: இந்தியாவின் பழமையான பாரம்பரியம், உலகின் அடையாளம்

வணக்கம்!

ஜூன் மாதம் பிறந்துவிட்டாலே, அது கொண்டாட்டங்களைக் கூடவே அழைத்து வருகிறது. ஒருபுறம், இந்த மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் 12 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கிறது; மறுபுறம், உலகம் 12-வது சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடுகிறது. 12 என்ற எண்ணின் இந்தச் சிறப்பான சேர்க்கை, இந்த நேரத்தை வாய்ப்புகளும் மகிழ்ச்சியும் இணையும் ஒரு கொண்டாட்டக் காலமாக மாற்றியுள்ளது.

இன்றைய வேகமான வாழ்க்கையில், யோகா என்பது மனம், உடல், அறிவு, ஆன்மா ஆகியவற்றிற்கு இடையே சமநிலையை ஊக்குவிக்கிறது. அதன் மூலம் ஒரு தனிநபரின் வாழ்க்கையில் அமைதி உணர்வை ஏற்படுத்துகிறது. தனிநபரை அவரது குடும்பத்துடன் இணைப்பதன் மூலம், யோகா மகிழ்ச்சியையும் மற்றும் நல்வாழ்வுக்கான வழியையும் வகுக்கிறது. குடும்பங்களுக்குள் சமூகம் குறித்த விழிப்புணர்வை வளர்ப்பதன் மூலம், சமூக நல்லிணக்கத்தை இது வலுப்படுத்துகிறது. இதே சமூகம் தேச ஒற்றுமையின் அடித்தளத்தை உருவாக்குவதுடன் உலகம் முழுவதும் அமைதி, நட்புறவு என்ற செய்தியைப் பரப்புகிறது. இவ்வாறு, யோகா என்பது தனிநபர், குடும்பம், சமூகம், தேசம், உலகம், ஒட்டுமொத்த மனிதகுலம் ஆகியவற்றை இணைக்கப் பயன்படுகிறது.

2014-ம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சிகளுக்கு உலகளாவிய சமூகத்திடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது; இதன் விளைவாக, 2015-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 அன்று சர்வதேச யோகா தினம் கொண்டாட்டம் தொடங்கியது. இந்தியாவில் யோகாவின் பாரம்பரியம் சுமார் 5,000 ஆண்டுகள் பழமையானது என்றாலும், ஐநா பொதுச் சபையின் அங்கீகாரம் இதற்கு உலகளாவிய அடையாளத்தை வழங்கியது. அதே நேரத்தில், யோகா சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்து, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய இரண்டிற்கும் புதிய ஊக்கம் அளித்தன. தற்போது, இந்தியாவின் உலகளாவிய அடையாளமாக யோகா உருவெடுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், ஜூன் 21 சர்வதேச யோகா தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தலைப்புதான் நமது தற்போதைய இதழின் அட்டைப் பக்கக் கட்டுரையாகும்.


மேலும், ஆளுமைப் பிரிவில், எவரெஸ்ட் சிகரத்தை வென்ற முதலாவது இந்தியப் பழங்குடிப் பெண் திருமதி வினிதா சோரனைப் படியுங்கள். மத்திய அமைச்சரவை முடிவுகள், பிரதமரின் வெளிநாட்டுப் பயணம், வேலைவாய்ப்பு திருவிழா, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற 51-வது பிரகதி கூட்டம், அவரது இருவார நிகழ்வுகள் ஆகியவை இதர முக்கிய அம்சங்களாகும். இவற்றுடன், உள் பக்கத்தில் மனதின் குரல் பின் பக்க அட்டையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27 அன்று நடைபெறும் சர்வதேச சிறுகுறு நடுத்தர தொழில்கள் தினம் ஆகியவை இந்த இதழின் அங்கங்களாக இடம் பெற்றுள்ளன.

உங்களுடைய ஆலோசனைகளை எங்களுக்குத் தொடர்ந்து அனுப்பி வைக்கவும்.

(திரு தீரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 பிற மொழிகளில் படிக்க/பதிவிறக்கம் செய்ய இந்த இணையதளத்தைப் பயன்படுத்தவும். https://newindiasamachar.pib.gov.in

# மின்னஞ்சல் பெட்டி




## ஊக்கமளிக்கும், பயனுள்ள இருவார இதழை வெளியிட்டதற்கு நல்வாழ்த்துகள்

நியூ இந்தியா சமாச்சார் இதழின் 2026 மே 1–15 பதிப்பில் வெளியான "புதிய இந்தியாவும் பெண்கள் வழிநடத்தும் தலைமைத்துவமும்" என்ற தலைப்பிலான அட்டைப் பக்கக் கட்டுரையை நான் முழுமனதுடன் பாராட்டுகிறேன். 'புதிய இந்தியாவில்' பெண்கள் எவ்வாறு மாற்றத்தின், தேசக் கட்டமைப்பின் உண்மையான ஊக்க சக்தியாக உருவெடுத்து வருகிறார்கள் என்பதை இந்தச் சிறப்புக் கட்டுரை அழகாக விளக்கியுள்ளது. "அவள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட எல்லைகளுக்குள் முடங்கிப் கிடப்பவள் அல்ல... மாறாக, புதிய பாதைகளை உருவாக்குபவள்" என்ற வரிகள் குறிப்பாக ஊக்கமளிப்பதாக இருந்தன. பெண் சக்தியை மேம்படுத்துவதிலும், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை வலுப்படுத்துவதிலும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையையும் அர்ப்பணிப்பையும் இந்தக் கட்டுரை திறம்பட எடுத்துரைத்துள்ளது. இத்தகைய ஊக்கமளிக்கும் சிறப்புக் கட்டுரையை வெளியிட்டதற்காக ஆசிரியர் குழுவிற்குப் பாராட்டுகள்.

michaelbks@gmail.com

## புதிய வளர்ச்சிக்கான செய்திகளையும் திட்டங்களையும் அறிவதில் மகிழ்ச்சி

நாட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பயணத்தை உள்ளடக்கிய இந்த விரிவான இதழுக்காக எனது மனமார்ந்த பாராட்டுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் இந்த இதழின் வழக்கமான வாசகர். அரசால் மேற்கொள்ளப்படும் அனைத்து சமீபத்திய வளர்ச்சிச் செய்திகளையும் புதிய முயற்சிகளையும் அறிந்து உடனுக்குடன் தகவல்களைப் பெறுவதில் நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு மன்மோகன் பஹேத்

man.bahed82@gmail.com

## வாசகர்களின் இதயங்களை ஆழமாகத் தொடும் இதழ்

'நியூ இந்தியா சமாச்சார்' முக்கியத் திட்டங்களையும் 'புதிய இந்தியாவின்' உணர்வையும் எடுத்துரைக்கிறது. இந்த ஆக்கபூர்வமான உள்ளடக்கம், விழிப்புணர்வுள்ள ஒரு குடிமகனின் பார்வையில் எழுதப்பட்டுள்ளது என்று நான் நம்புகிறேன். உங்களின் மதிப்புமிக்க நேரத்தை செலவிட்டு, இந்தியாவின் முன்னேற்றத்தைப் பதிவு செய்வதில் நீங்கள் செய்து வரும் சிறப்பான பணிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

திரு ராஜா முத்யாலா

rajaa.muthyala@gmail.com

## அதிவேகமாக முன்னேறும் இந்தியா

நியூ இந்தியா சமாச்சார் இதழில் ஆன்லைன் கட்டுரை ஒன்றை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நமது இந்தியா அதிவேகமாக முன்னேறி வருகிறது. தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஒவ்வொரு பெண்ணைக் குறித்தும் நான் பெருமைப்படுகிறேன். 'ஆபரேஷன் சிந்தூர்' மூலம் இந்தியாவின் தனித்துவமான வலிமையை உலகம் கண்டறிந்தது.

jamesdevassy603@gmail.com

## தேசத்தின் வளர்ச்சிப் பயணம்

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையின்கீழ், காசி விஸ்வநாதர் கோயிலின் வேதக் கடிகாரத்தின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி நான் முதல்முறையாகத் தெரிந்துகொண்டேன். பிரதமர் திரு மோடியின் நிர்வாகத்திற்கும் தொலைநோக்குச் சிந்தனைக்கும் நன்றி. நமது நாடான இந்தியா வளர்ச்சியின் பாதையில் முன்னோக்கிச் செல்வது தேசத்தின் நல்வாய்ப்பாகும். அதுமட்டுமின்றி, இது வருங்காலத் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைவதோடு, அவர்களின் விழிப்புணர்வையும் பன்மடங்கு வளர்க்கிறது.

திரு நீரஜ் குமார் அகர்வால்

neerajagarwal951@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

# செய்திச் சுருக்கம்



## வளர்ச்சியடைந்த இந்தியா– ஜி–ராம்–ஜி ஜூலை 1 முதல் அமலுக்கு வருகிறது

இந்தியாவில் ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ஒரு புதிய திசையை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம் அல்லது 'வளர்ச்சியடைந்த இந்தியா–ஜி ராம் ஜி' சட்டம், 2026 ஜூலை 1 முதல் நாடு முழுவதும் அமலுக்கு வர உள்ளது. இந்தப் புதிய கட்டமைப்பில், திறன்சாரா கைவினைப் பணிகளைச் செய்ய விண்ணப்பிக்கும் ஊரகக் குடும்பத்தில் ஒவ்வொரு வயது வந்தவருக்கும், ஒவ்வொரு நிதியாண்டிலும் 125 நாட்களுக்கு ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்புக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்கப்படும். இது தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 100 நாட்கள் வேலைவாய்ப்பு உத்தரவாதத்தைவிட 25 நாட்கள் கூடுதலாகும்.

தொழிலாளர்கள் வேலை கோரியதிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும், தவறும்பட்சத்தில் இந்தச் சட்ட விதிகளின்படி வேலையின்மை உதவித்தொகை பெற தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடிப்பயன் பரிமாற்றம் மூலம் வாராந்தர அடிப்படையிலோ அல்லது பணிப்பதிவேடு முடிக்கப்பட்ட 15 நாட்களுக்குள்ளோ ஊதியம் நேரடியாகச் செலுத்தப்படும். இதற்கான கட்டண அட்டவணை பின்பற்றப்படாவிட்டால், இந்தச் சட்ட விதிகளின்படி தாமதத்திற்கான இழப்பீட்டைப் பெற தொழிலாளர்கள் தகுதி பெறுவார்கள். புதிய ஊரக வேலை உறுதி அட்டைகள் வழங்கப்படும் வரை, தற்போதுள்ள இ–கேஒய்சி சரிபார்க்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி அட்டைகள் 'வளர்ச்சியடைந்த இந்தியா–ஜி ராம் ஜி' திட்டத்திற்கு செல்லுபடியாகும். இ–கேஒய்சி சரிபார்ப்பு நிலுவையில் உள்ளது என்ற காரணத்திற்காக மட்டும் எந்தவொரு தொழிலாளிக்கும் வேலைவாய்ப்பு மறுக்கப்படக் கூடாது.

## போபாலில் கடற்படை பாய்மரக் கப்பல் பயிற்சி மையம் திறப்பு

2026 மே 17 அன்று இந்தியக் கடற்படை தனது முதன்மை கடற்படை பாய்மரக் கப்பல் பயிற்சி மையத்தை போபாலின் புகழ்பெற்ற அப்பர் ஏரியில் (போஜ்தல் என்றும் அழைக்கப்படுகிறது) திறந்து வைத்தது. அதிநவீன வசதிகளுடன் கூடிய இந்த பாய்மரக் கப்பல் பயிற்சி மையம், இந்தியக் கடற்படையின் பாய்மரக் கப்பல் குழு, அதன் துடுப்புப் படகு, தண்டுப் படகு, சிறுபடகுக் குழுக்கள், தேசிய மாணவர் படை ஆகியவற்றுக்கு விரிவான பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப்படும். தற்போது, கடற்படை பாய்மரக் கப்பல் குழுவில் உள்ள 34 உறுப்பினர்களில் 17 பேர் மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இம்மாநிலத்தைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் போட்டித்தன்மை வாய்ந்த நீர் விளையாட்டுகளில் ஈடுபட ஊக்கமளிப்பதும், அவர்களைப் பாதுகாப்புப் படைகளில் சேர ஊக்குவிப்பதும் இந்த முயற்சியின் நோக்கமாகும். ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுகளுக்கு உலகத்தரம் வாய்ந்த விளையாட்டுத் திறமைகளை வளர்ப்பதற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதை நோக்கிய முயற்சியில் ஒரு முக்கியப்படியாகும்.




## 'நாகாலாந்து காபி' இயக்க தொடக்கம்

நாகாலாந்து மாநிலத்திற்குத் தொகுப்பு அடிப்படையிலான 'காபி மதிப்புத் தொடர் மேம்பாட்டு இயக்கம்' தொடங்கப்பட்டுள்ளது. 'நாகாலாந்து காபி' இயக்கத்திற்கான கட்டமைப்பு ரூ.175 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் சேர்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கள யதார்த்தங்கள், காபி உற்பத்தி செய்யும் சமூகங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அமைவதை உறுதி செய்யும் வகையில் இந்த இயக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறைக்கு ஏற்ப உள்ளது. அதுமட்டுமின்றி, வடகிழக்கு பிராந்திய மேம்பாடு, தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா எம். சிந்தியா, 'அருணாச்சல கிவி: அருணாச்சல பிரதேசத்தின் தனித்துவமான விற்பனை அம்சம், அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கான தொகுப்பு அடிப்படையிலான கிவி சாகுபடி, மதிப்பு அடிப்படையிலான தொடர் மேம்பாட்டு இயக்கத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.



# இந்தியாவின் முதலாவது சுதேசி ஹைட்ரஜன் ரயில்

இந்தியாவின் முதலாவது சுதேசி ஹைட்ரஜன் ரயில் பயணத்திற்குத் தயாராக உள்ளது. 1200 கிலோவாட் என்ஜின் மூலம் இயக்கப்படும் இந்த அதிநவீன, புகையில்லா, மாசற்ற ரயில் மணிக்கு அதிகபட்சமாக 75 கிலோமீட்டர் வேகத்தில் இயங்கும். 10 பெட்டிகளைக் கொண்ட இந்த ஹைட்ரஜன் எரிபொருள் செல் அடிப்படையிலான ரயிலை வடக்கு மத்திய ரயில்வேயின் ஜிந்த்–சோனிபட் பிரிவில் இயக்க இந்திய ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது. இந்த முயற்சி ரயில்வே துறையில் அடுத்த தலைமுறை எரிபொருள் தொழில்நுட்ப மேம்பாட்டின் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பாராட்டப்படுகிறது.

இந்த ஹைட்ரஜன் ரயில் முயற்சியைத் தொடங்கியதன் மூலம், தூய்மையான ரயில் போக்குவரத்திற்கு ஹைட்ரஜனைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைத் தீவிரமாக ஆராய்ந்து வரும் ஜெர்மனி, ஜப்பான், சீனா, அமெரிக்கா உள்ளிட்ட சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் குழுவில் இந்தியா இப்போது இணைந்துள்ளது. "புதிய சிந்தனை, புதிய ஆற்றல்" கொண்ட "புதிய இந்தியாவை" பிரதிபலிக்கும் இந்த ஹைட்ரஜன் ரயில், நீராவியை மட்டுமே வெளியிடுகிறது. தூய்மையான ஆற்றலால் இயக்கப்படும் இந்த ரயில், உள்நாட்டுத் தொழில்நுட்பத்தையும், பாதுகாப்பான செயல்பாடுகளையும் கொண்டுள்ளதால், கார்பன் உமிழ்வு இல்லாத நிலையை அடைவதற்கான இந்தியாவின் பயணத்தில் ஒரு முக்கிய செயல்பாடாகும்.




## மண் வளம் காப்போம் இயக்கம்

### ஜூன் 30 வரை நாடு முழுவதும் நடத்தப்படும்

'மண் வளம் காப்போம்' என்பது வெறும் விழிப்புணர்வு நிகழ்ச்சி அல்ல. பண்ணை, விவசாயி, கிராமம் ஆகியவற்றை இணைத்து, நாட்டின் ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்லப்படும் ஒரு விரிவான தேசிய இயக்கமாகும். இந்த இயக்கம் ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பது – குறிப்பாக, அவற்றின் சமச்சீரற்ற பயன்பாட்டைத் தடுப்பதில் கவனம் செலுத்துகிறது. மண் பரிசோதனை அடிப்படையில் உரங்களைச் சமச்சீராகவும் பொருத்தமாகவும் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல் உட்பட பல்வேறு வகையான தகவல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.



## மக்கள்தொகை மாற்றத்தை ஆராய

### உயர்மட்டக் குழு உருவாக்கம்

ஊடுருவல் மற்றும் இதர காரணிகளால் ஏற்படும் இயற்கைக்கு மாறான மக்கள்தொகை மாற்றங்கள், எந்தவொரு தேசத்தின் தற்போதைய எதிர்காலத்திற்கும் ஒரு கடுமையான சவாலாக விளங்குகின்றன. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காக, 2025 ஆகஸ்ட் 15 அன்று "மக்கள்தொகை மாற்றம் குறித்த உயர்மட்டக் குழு" அமைக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்தார் – இந்த முன்மொழிவுக்கு 2025 செப்டம்பர் 11 அன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அரசு இப்போது இக்குழுவை முறைப்படி அமைத்துள்ளது. சட்டவிரோத குடியேற்றம் மற்றும் இதர அசாதாரண காரணங்களால் இந்தியா முழுவதும் ஏற்படும் மக்கள்தொகை மாற்றங்கள் குறித்து இக்குழு ஒரு விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ளும்; அதுமட்டுமின்றி, குறிப்பிட்ட மத மற்றும் சமூகப் பிரிவினர்கள் நிலையில் ஏற்படும் அசாதாரண மக்கள் தொகை மாற்றங்களின் வடிவங்களை இது பகுப்பாய்வு செய்யும். அதே நேரத்தில், இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முறையான, காலவரையறைக்குட்பட்ட திட்டத்தையும் இது சமர்ப்பிக்கும்.



பிறந்த தினம்: 1987 ஜூன் 21

# எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் கால்தடம் பதித்த இந்தியாவின் முதல் பழங்குடியினப் பெண்

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த வினிதா சோரன் எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் கால்தடம் பதித்த முதல் பழங்குடியினப் பெண் என்ற பெருமையைப் பெற்று, வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். 25 வயதில் வினிதா ஏறிய உயரம், கடின உழைப்பு, அசைக்க முடியாத உறுதியின் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. உலகின் மிக உயரிய சிகரத்தின் உச்சியை அடைந்ததன் மூலம், எந்தவித சமூக கட்டுப்பாடுகளாலும் கனவுகளுக்கு அணை போட முடியாது என்பதை அவர் நிரூபித்துள்ளார். ஜார்க்கண்ட் மாநிலத்தின் சிறிய கிராமத்திலிருந்து, உலகின் உயரிய சிகரத்தை அடைந்தது வரையிலான அவரது பயணம், நாட்டின் இளம் பெண்களிடையே வினிதாவை ஒரு முன்மாதிரியாக மாற்றியுள்ளது.

பழங்குடியினப் பின்னணியைக் கொண்டவராக இருந்தபோதும், எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் உச்சியை அடைந்ததன் மூலம், வினிதா, போற்றத்தக்க சாதனையைப் படைத்துள்ளார். பழங்குடிப் பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் விவசாயம் சார்ந்ததாக அமைந்திருப்பதுடன், கல்வியும், கனவுகளும் குறைவாகவே உள்ளன. இருந்த போதும் வினிதாவின் கனவுகள், எவரெஸ்ட் மலைச் சிகரத்தை விட உயர்வாகவே இருந்தன. 1987 ஜூன் 21 அன்று பிறந்த வினிதா, எவரெஸ்ட் மலை உச்சியை அடைந்தது மட்டுமின்றி, தனது அதீத ஆர்வம், உணர்வு, உறுதியான விடாமுயற்சியுடன், ஒட்டுமொத்த இந்தியப் பழங்குடி சமூகத்திற்கே புதிய அடையாளத்தை ஏற்படுத்தித் தந்தார்.

கோல்டன் பகுதியைச் சேர்ந்த வினிதா சோரன், வயல்களுடன் தனது குழந்தைப் பருவத்தைக் கழித்தார். அவரது கிராமத்திலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும், ஆசிரியை அல்லது செவிலியர் பணிகள் மட்டுமே பெண்களுக்கு உரியதாகக் கருதப்பட்டன. எனினும் வினிதாவின் கனவு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. எவரெஸ்ட் சிகரத்தை அடைவதற்கு, அவர் ஏழு ஆண்டுகள் கடினமாக உழைத்தார். மலையேற்றத்திற்கு, உடல்வலிமையுடன், மன வலிமை, துணிச்சல், உறுதி ஆகியவையும் மிகவும் அவசியம் என்பதை இந்தக் காலகட்டத்தில் அவர் புரிந்து கொண்டார். மிகக் கடுமையான குளிரும், பனிப்பொழிவும் அவருக்கு மிகுந்த சவாலாக இருந்தன. தமக்கு ஒரு தெளிவான லட்சியம் இல்லாதது போல் அவ்வப்போது அவருக்குத் தோன்றினாலும், துணிச்சல், விடாமுயற்சி, சிகரத்தின் உச்சியை எட்டுவதில் அதீத ஆர்வம் போன்றவை பனி படர்ந்த உயரிய மலை உச்சிக்கு அவரை அழைத்துச் சென்றன.

2004–ல், பச்சேந்திரி பால் உடனான முதல் சந்திப்பின்போது, அவரால் ஈர்க்கப்பட்டு, மலையேறும் லட்சியத்தை வினிதா நிர்ணயித்தார். எவரெஸ்ட் மலைச் சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண்மணியான பச்சேந்திரி பால், வினிதாவிற்குப் பயிற்சி அளித்தார். விவசாயப் பழங்குடி குடும்பத்தைச் சேர்ந்த வினிதா, மலையேறுவதற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ள போதிய ஊக்கமின்றி தவித்தார். தனது வீட்டை விட்டு வெளியேறுவதே எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதைப் போன்ற பெரும் சவாலாக அவருக்கு இருந்தது. எனினும், அவரது குடும்பத்தினர், வினிதா மீது நம்பிக்கை வைத்து, அவரை முன்னேற ஊக்குவித்தனர். கடினமான பயிற்சிகளுக்குப் பின், எவரெஸ்ட் சிகரத்தை ஏற, வினிதா தயாராக இருப்பதாக பச்சேந்திரி பால் கூறியபோது, அவரால் மறுக்க இயலவில்லை. இறுதியில் அவர் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக அடைந்தார். அதனைத் தொடர்ந்து, இதர பல சிகரங்களையும் அவர் அடைந்தார். இன்று, தனது குடும்பத்திற்கு வினிதா ஓர் அடையாளமாகத் திகழ்கிறார்.

ஜார்க்கண்டின் சரைகேலா கர்சாவன் மாவட்டத்தில் உள்ள கேஷோர்சோரா கிராமத்தைச் சேர்ந்த வினிதாவின் எவரெஸ்ட் பயணத்திற்கு, டாடா ஸ்டீல் நிறுவனம் உதவிக்கரம் நீட்டியது, அதன் பெருநிறுவன சமூகப் பொறுப்பு செயல்பாட்டின் ஒரு பகுதியாக டாடா ஸ்டீல் நிறுவனம் வினிதாவிற்கு ஆதரவளித்தது. 8,848 மீட்டர் உயரமுள்ள உலகின் மிக உயரிய சிகரத்திற்கு ஒரு கிராமப்புற பழங்குடிப் பெண் ஏறியதே, ஒரு சாதனையாக அமைந்தது. தனது சாதனைகளுக்காக வினிதா நாடு முழுவதும் ஏராளமான கவுரவங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.




51–வது பிரகதி கூட்டத்திற்குப் பிரதமர் மோடி தலைமை தாங்கினார்

# வழக்கமான கண்காணிப்பு, பொதுமக்களின் பங்கேற்புக்கு முக்கியத்துவம்

இந்தியாவில் டிஜிட்டல் ஆளுகைக்கான செயல்திறன் வாய்ந்த, முக்கிய தளமாக பிரகதி (ஆக்கப்பவர்வமான ஆளுகை மற்றும் உரிய நேரத்தில் செயல்படுத்துதல்) வளர்ச்சி அடைந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் வழக்கமான தலைமையின் கீழ், இந்தத் தளம், 2015 மார்ச் முதல், ஏராளமான முக்கிய திட்டப் பணிகளை விரைபடுத்துவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. இந்த முன்முயற்சியின் தொடர்ச்சியாக, மே 27 அன்று நடைபெற்ற 51–வது பிரகதி கூட்டத்திற்குப் பிரதமர் மோடி தலைமை தாங்கினார். மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சிறந்த, காலவரையறைக்குட்பட்ட நிர்வாகத்தை உறுதி செய்வதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்...

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தால் இயங்கும், பன்முகத் தளமான பிரகதியின் 51–வது கூட்டத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி தலைமைத் தாங்கினார். ரயில்வே, எரிசக்தி, சாலைப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் சுமார் 30,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏழு உள்கட்டமைப்புத் திட்டங்களின் செயல்பாடுகளை, கூட்டத்தின் போது பிரதமர் ஆய்வு செய்தார். மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதால், செலவு அதிகரிப்பதுடன், திட்டப் பலன்கள் சாமானிய மக்களைச் சென்றடைவதும் தாமதமாகிறது என்பதைக் கூட்டத்தின் போது பிரதமர் மோடி எடுத்துரைத்தார். ஒவ்வொரு தாமதமும், மக்களின் வாழ்விலும், பிராந்திய வளர்ச்சியிலும், பொது மக்களுக்கான ஆதாரங்களிலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக, நிலுவையில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கவும், இடையூறுகளைக் களையவும், பணிகளை விரைவாக முடிக்கவும் ஆக்கபூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றுமாறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநிலங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

கென்–பெட்வா நதி இணைப்புத் திட்டம், மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றும், இதன் மூலம் அந்த மாநிலங்கள் தங்களுக்குள் பரஸ்பர ஒருமித்த கருத்தின் மூலம் நீர் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள இயலும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். கழிவுகளைப் பதப்படுத்தும் ஆலைகள், கோபர்தன் ஆலைகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான உள்கட்டமைப்புப் பணிகளை கூடிய விரைவில் முடிப்பதற்கு அவர் மாநிலங்களை வலியுறுத்தினார். இந்நிலையில், பிரதமரின் அறிவுரைக்கு இணங்க, சமூகத்துறை திட்டங்களை மாதந்தோறும் ஆய்வு செய்யும் நடைமுறை மாநில அளவில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கமாக, தூய்மை இந்தியா இயக்கம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

## முக்கிய திட்டங்களைப் பிரதமர் ஆய்வு செய்தார்

- ரயில்வே, எரிசக்தி, சாலைப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஏழு உள்கட்டமைப்புத் திட்டங்கள்.
- இரண்டாவது கட்ட நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கம், கென்–பெட்வா நதி இணைப்புத் திட்டம்.
- நகர்ப்புறங்களில் கூரை மீதான சூரியசக்தி தகடுகள் நிறுவலை விரைவாக விரிவுபடுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

**₹30,000** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஒன்பது மாநிலங்களில் நடைபெறும் ஆய்வு செய்யப்பட்டன



**சர்வதேச யோகா தினத்தின் 12 ஆண்டுகள்**

# உலகின் மிகப்பெரிய கலாச்சாரக் கொண்டாட்டமாக யோகாவின் வளர்ச்சி

"यौगश्चित्तवृत्तिनिरौ ध:" யோகா என்பது சித்தம் அல்லது மனதில் ஏற்படும் எண்ண அலைகளைக் கட்டுப்படுத்துவதாகும். யோகா, ஆயுர்வேதம், இதர பாரம்பரிய மருத்துவ அமைப்புமுறைகளை நாட்டின் சுகாதார சேவைகளுடன் ஒருங்கிணைப்பதற்காக, 2014–ல் உருவாக்கப்பட்ட தனி ஆயுஷ் அமைச்சக முன்முயற்சியும், 2015 ஜூன் 21 முதல் உலக அளவில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படத் துவங்கியதும் திருப்புமுனைகளாக அமைந்தன. நமது நாகரிகத்தின் அடையாளமாக விளங்கும் யோகா, அனைத்து நிலைகளிலும் நமது ஆரோக்கியத்தையும், நலனையும் உறுதி செய்கிறது. இன்று, யோகாவின் வலிமையால் ஊக்கம் பெற்று, இந்தியா தனது 'மென் சக்தியின்' அபாரமான செல்வாக்கை உலகம் முழுவதும் பறைசாற்றி வருகிறது....

இந்த ஆண்டு ஜூன் 21 அன்று கொண்டாடப்படும் 12–வது சர்வதேச யோகா தினம், ஒரு சிறப்பான தருணத்துடன் இணைந்து வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பதவியேற்று 12 ஆண்டுகள் நிறைவடைவதால், ஜூன் மாதம், கொண்டாட்டங்களின் மாதமாக மாறி உள்ளது...

சாதாரண மக்கள், பிரமுகர்கள், இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் பெண்கள், நம்பிக்கையுள்ளவர், நம்பிக்கையற்றவர் என யாராக இருந்தாலும், அனைத்து வயதினரின் உடல், ஆற்றல், மனம், உணர்வுபூர்வமான அடையாளத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இப்போது 'யோகா' மாறியுள்ளது. மதம், இனம், சாதி, செல்வந்தர், ஏழை ஆகியவற்றுடன், நாடுகளைப் பிரிக்கும் தேசிய எல்லைகளையும் கடந்து, ஒட்டுமொத்த உலகின் உன்னத மொழியாக இது உருவெடுத்துள்ளது. யோகாவின் இந்தத் தனித்துவம் வாய்ந்த தன்மையைப் பற்றி, புகழ்பெற்ற சமஸ்கிருத கவிஞரான பர்த்ருஹரி, பல நூற்றாண்டுகளுக்கு முன் தனது 'சதகத்ரயம்' என்ற படைப்பில் போற்றிப் புகழ்ந்திருந்தார்.

யோகாவைத் தொடர்ந்து முறையாக பயிற்சி செய்வதன் மூலம், சில நற்பண்புகள் நம்மில் இரண்டறக் கலந்து விடுகின்றன என்று பொருள்படும் வகையில் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஸ்லோகம் அமைந்துள்ளது. யோகா பயிற்சி துணிச்சலை வளர்க்கிறது–இது ஒரு தந்தையைப் போல் நம்மைப் பாதுகாக்கிறது; தனது குழந்தைகள் மீது அளவில்லாத அன்பு செலுத்தும் ஒரு தாயைப் போல் மன்னிக்கும் மனப்பான்மையை வளர்க்கிறது– மேலும் மன நிம்மதி நமது உற்ற நண்பன் ஆகிறது. தொடர்ச்சியான யோகா பயிற்சியின் மூலம், உண்மை நமது சந்ததியாகவும், கருணை நமது சகோதரியாகவும், தன்னடக்கம் நமது சகோதரனாகவும், நாம் வாழும் பூமியே நமது படுக்கையாகவும், ஞானம் நமது பசியைத் தணிக்கும் உணவாகவும் ஆகிறது என்று பர்த்ருஹரி குறிப்பிட்டுள்ளார். ஒருவரிடம் இதுபோன்ற ஏராளமான நற்குணங்கள் நிறைந்திருக்கும் போது, அந்த யோகி, அனைத்து விதமான அச்சங்களையும் வென்றுவிடுகிறார்.

சுகாதாரக் காப்பீடு என்பது மிக அரிதாகவே இலவசமாகக் கிடைக்கும் ஒரு சூழலில், எந்தவிதக் கட்டணமும் இன்றி, நல்ல ஆரோக்கியத்திற்கு யோகா உத்தரவாதம் அளிக்கிறது. "உலக நாடுகளை யோகா எவ்வாறு ஒன்றிணைத்துள்ளது என்பதை இந்த நூற்றாண்டில் நாம் உணர்ந்திருக்கிறோம்.

உடல், மனம், ஞானம், உணர்வு ஆகியவற்றை யோகா ஒருமுகப்படுத்துவதைப் போலவே, ஒட்டுமொத்த உலகையும் அது ஒன்றிணைக்கிறது. மன அழுத்தம் இல்லாத, நோயற்ற, மகிழ்ச்சியான வாழ்வைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்; இவை அனைத்தும் நிறைவேற ஒற்றை வழி இருக்குமேயானால், அதுதான் யோகா. ஒரு முழுமையான, சமச்சீரான வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதைக் கண்டறியவும், உடல், மனம், எண்ணம், நடத்தை ஆகியவற்றின் நலனை நோக்கிய அந்த அகப் பயணத்தை அனுபவிக்கவும் ஒருவர் உண்மையாகவே விரும்பினால், யோகாவின் மூலமே இது சாத்தியமாகிறது", என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

யோகா என்பது வெறும் உடல் பயிற்சி வகை மட்டுமின்றி, அது, ஒருவருடனும், உலகத்துடனும், இயற்கையுடனும் ஒன்றிணைந்த உணர்வைக் கண்டறியும் ஒரு தேடலை உள்ளடக்கியுள்ளது. பிரதமராகப் பதவியேற்று வெறும் நான்கு மாதங்களுக்குள், 2014 செப்டம்பர் 27 அன்று, யோகாவை உலகளாவிய தளத்திற்கு உயர்த்தும் முன்முயற்சியைப் பிரதமர் மோடி மேற்கொண்டார்; இதையடுத்து 2014 டிசம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த முன்முயற்சியை அங்கீகரித்ததன் விளைவாக, ஜூன் 21, சர்வதேச யோகா தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சர்வதேசக் கொண்டாட்டமாக மாறிய யோகா**

योगः कर्मसु कौशलम्।।- யோகாவில் நிபுணத்துவம் என்று இது பொருள்படுகிறது. யோகா பயிற்சியின் மூலம் வாழ்க்கையில் மேலும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான ஆற்றலை இந்த மந்திரம் நமக்குக் கற்றுத் தருகிறது. நாம் நம் கடமைகளை ஒழுக்கமாக நிறைவேற்றி, நம் பொறுப்புகளை சரிவர செய்தால், அது கூட யோகா பயிற்சியின் ஒரு வகையாகக் கருதப்படுகிறது. இந்த மந்திரத்தையே அடிப்படையாகக் கொண்டு, யோகாவிற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்து, அதை ஒரு "மென் சக்தியாக" இந்தியா உருவாக்கியுள்ளது; மேலும் யோகாவை கர்ம யோகாவுடன் இணைத்து, தனிநபர், சமூகம் மட்டுமின்றி தேசத்தின் வளர்ச்சித் திறனையும் பன்மடங்கு இது உயர்த்தியுள்ளது.

உலகின் செல்வாக்குமிக்க அமைப்பான ஜி 20-க்குத் தலைமை தாங்கிய போது, இந்திய நாகரிகத்தின் அடையாளத்தை நாடு வலுப்படுத்தியதுடன், ஒவ்வொரு ஜி 20 நிகழ்ச்சியிலும் யோகா முக்கிய அங்கம் வகிக்க வழிவகை செய்யப்பட்டது. 2014-ல், தனியாக ஆயுஷ் அமைச்சகத்தை உருவாக்கி, நாட்டின் சுகாதார சேவைகளில் ஆயுர்வேதம், இதர பாரம்பரிய மருத்துவ அமைப்புமுறைகளுடன் யோகாவையும் இந்தியா ஒருங்கிணைத்தது. இந்தியாவின் இத்தகைய முயற்சிகளின் பலனாகத் தான், 2015 ஜூன் 21 முதல், சர்வதேச யோகா தினத்தை உலக நாடுகள் கடைப்பிடிக்கத் தொடங்கின. இந்த முயற்சிகளின் விளைவாக, இந்தியாவின் தொன்மையான, வளமான, பாரம்பரியமான யோகா, நோய் தடுப்பிற்கு ஒரு சக்திவாய்ந்த கருவியாக உருவெடுத்துள்ளதுடன், அதில் பொதிந்துள்ள ஆற்றலையும் உலகம் உணர்ந்துள்ளது. சர்வதேச ஒத்துழைப்பிற்குப் பகிரப்பட்ட அடித்தளமாக தற்போது யோகா வளர்ச்சியடைந்துள்ளது. மனித சமூகத்திற்கு நோயற்ற வாழ்வை ஏற்படுத்தித் தரும் உத்தரவாதத்தை யோகா வழங்குகிறது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன், வீடுகளுக்கும், ஆன்மீக மையங்களுக்கும் மட்டுமே உரியதாக இருந்த யோகா, தற்போது உலகம் முழுவதும் பிரபலமடைந்துள்ளது.




**கர்ம யோகாவின் உணர்வால் எழுச்சி பெற்று யோகா பயிற்சியின் பாதையை நாம் பின்பற்றும்போது, தனிநபராகவும், சமுதாயமாகவும், ஒட்டுமொத்த தேசமாகவும் நமது வலிமை பன்மடங்கு பெருகுகிறது. நமது ஆரோக்கியத்தையும், நம் அன்புக்குரியவரின் நலனையும் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்ற உறுதிப்பாட்டை இன்று நாம் எடுக்க வேண்டும். துடிப்பான குடிமக்களாக, குடும்பமாகவும், சமுதாயமாகவும், ஒற்றுமையாக நாம் அனைவரும் முன்னேறுவோம்.**

**– நரேந்திர மோடி, பிரதமர்**

யோகா பயிற்சி என்பது தனிநபருக்கானது மட்டுமின்றி, ஒட்டுமொத்த மனித குலத்தின் நலனுக்கானது என்பதால், யோகா, தற்போது உலகளாவிய கொண்டாட்டமாகப் பரிணமித்துள்ளது.

இந்த ஆண்டு சர்வதேச யோகா தினத்தை உலகம் கொண்டாடும் வேளையில், பிரதமர் மோடி தலைமையிலான அரசு பதவியேற்று 12




# யோகா ஆராய்ச்சி

**100** | மாவட்டங்களை உள்ளடக்கிய, பல மையங்களைக் கொண்ட நாடு தழுவிய ஆராய்ச்சி ஆய்வறிக்கையில் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதில் யோகா பயனுள்ளதாக இருப்பதாக இந்தியா முழுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

- ஆய்வறிக்கைகளின் வெளியீடு சுமார் 6 மடங்காகவும், மருத்துவப் பரிசோதனைகள் 11 சதவீதமும் அதிகரித்துள்ளன. புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் உள்ள ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தின் 20 ஆய்வறிக்கைகள், சர்வதேச இதழ்களில் வெளியாகி உள்ளன.
- யோகா பயிற்சியை மேற்கொண்ட நோயாளிகளிடையே, புற்றுநோய் மீண்டும் வருவதற்கான அபாயம் சுமார் 15% சதவீதமும் குறைவாக இருந்தது.
- ஒற்றைத் தலைவலி பிரச்சனையைத் தீர்ப்பதில் யோகாவின் பயன்கள் பற்றி நரம்பியல் இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரை விரிவாக எடுத்துரைத்தது. யோகா மூலம் சர்க்கரை நோய்க்கு முந்தைய நிலையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற ஆய்வு முடிவை, அமெரிக்க நீரிழிவு நோய் சங்கம் பாராட்டியுள்ளது.
- ஆயுஷ் ஆராய்ச்சி வலைப்பக்கத்தில் மட்டுமே, யோகா, இயற்கை மருத்துவம் தொடர்பாக சுமார் 1,426 ஆய்வறிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

## சர்வதேச யோகா தினத்தில் அதிகரித்து வரும் பங்கேற்பு

- 2016 சர்வதேச யோகா தினத்தின்போது, பொது யோகா நெறிமுறை அடிப்படையிலான செயல்விளக்க நிகழ்ச்சிகளில் ஏறத்தாழ 8.5 மில்லியன் பேர் பங்கேற்றதாகக் கணிக்கப்பட்டுள்ளது. 2019 சர்வதேச யோகா தினத்தில், இந்த எண்ணிக்கை 90 மில்லியன் வரை அதிகரித்தது.
- 2022 சர்வதேச யோகா தினத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 221.3 மில்லியனாகவும், 2023-ல், இது 234.4 மில்லியனாகவும் பதிவானது.
- 2024-ல் நடைபெற்ற சர்வதேச யோகா தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் 245.3 மில்லியன் பேரும், 2025-ல் 260 மில்லியன் பேரும் பங்கேற்றனர்.
- எதிர்வரும் 2026 சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, ஜூன் 21 அன்று நடைபெறவுள்ள பொது யோகா நெறிமுறை அடிப்படையிலான செயல்விளக்க அமர்வுகளில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை 270 மில்லியனைத் தாண்டக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்தியக் கலாச்சாரத்தின்படி, 12 ஆண்டுகள் என்ற காலம் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது; ஒரு துறவியைப் பொருத்தவரை இது ஒட்டுமொத்த யுகத்திற்கு இணையானதாகும். அதே வேளையில், வளர்ச்சியடைந்த நாடாக மாறும் தனது லட்சிய இலக்கை நோக்கி இந்தியா தொடர்ந்து சீராக முன்னேறுகிறது.

**யோகாவிற்கான உலகளாவிய சந்தை விரிவடைகிறது**

யோகாவின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளை அடையும் தருணமாக தற்போதைய காலம் அமைந்துள்ளது. யோகா துறையில் நுழையும் இளைஞர்கள், புதுமையான யோசனைகளுடன் வருகிறார்கள். இந்நிலையில், 'ஸ்டார்ட் அப் யோகா போட்டியை' ஆயுஷ் அமைச்சகம் அறிமுகம் செய்து. அனைவருக்கும் பலதரப்பட்ட வாய்ப்புகளை வழங்கும் மகத்தான ஆற்றல் ஆயுஷ் துறையில் உள்ளது. உதாரணமாக, இன்று ஆயுஷ் துறையில் இயங்கும் சுமார் 40,000 குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அல்லது சிறு தொழில் நிறுவனங்கள், ஏராளமான தயாரிப்புகளை வழங்கி வருவதுடன், பல்வேறு முன்முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. இத்தகைய முயற்சிகள், உள்ளூர் பொருளாதாரத்தைக் கணிசமாக ஊக்குவிக்கின்றன. 12 ஆண்டுகளுக்கு முன், நாட்டில் ஆயுஷ் துறையின் மதிப்பு சுமார் 20,000 கோடி ரூபாயாக இருந்தது; தற்போது இதன் மதிப்பு ஏறத்தாழ 1.5 லட்சம் கோடியை நெருங்குகிறது. வரும் நாட்களில் இந்தத் துறை, சர்வதேசச் சந்தையில் மேலும் விரிவடையும் நிலையில் உள்ளது. மூலிகை மருந்துகள், வாசனைப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை மதிப்பு தற்போது 10 லட்சம் கோடி ரூபாயாக (120 பில்லியன் டாலர்) உள்ளது. பாரம்பரிய மருந்துகளின் இந்தத் துறை, தொடர்ச்சியாக விரிவாக்கப்படுவதுடன், இதன் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள இந்தியா தயாராக உள்ளது. இந்த வளர்ச்சியால், இளைஞர்களுக்கு ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். உலக சுகாதார நிறுவனம், இந்தியாவுடன் இணைந்து, குஜராத் மாநிலம் ஜாம்நகரில் பாரம்பரிய மருத்துவத்திற்கான சர்வதேச மையத்தை உருவாக்கியுள்ளது. இது போன்ற முன்முயற்சிகளின் வாயிலாக, பாரம்பரிய மருத்துவத்துறையில் உலகளாவிய தலைமையாக இந்தியா தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. பாரம்பரிய மருத்துவத்தை ஊக்குவித்து, இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில், இந்த மையத்தின் உருவாக்கம், குறிப்பிடத்தக்க முயற்சியாக அமைந்துள்ளது. உலக அளவில் சான்றுகள் அடிப்படையில் பாரம்பரியமான, கூடுதலான, ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான முக்கிய அறிவுசார் மையமாக இது திகழ்கிறது. மேலும், எய்ம்ஸ் மருத்துவமனையை மாதிரியாகக் கொண்டு, கூடுதலாக மூன்று ஆயுர்வேத நிறுவனங்கள் நிர்மாணிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

**நமது யோகாவின் முக்கியத்துவத்திற்கு உலக நாடுகளின் அங்கீகாரம்**

ஆயுர்வேதத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கின் மற்றொரு முக்கிய அம்சம், யோகா சுற்றுலா ஆகும். யோகா என்பது உடல் பயிற்சி வகை மட்டுமின்றி, ஓர் உணர்வைக் கண்டறியும் தேடலையும் அது உள்ளடக்கியுள்ளது.

இந்த உணர்வு, ஜூன் 21–ம் தேதி 'சர்வதேச யோகா தினம்' என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட போது உறுதியானது. ஐ நா பொதுச் சபையின் 193 உறுப்பு நாடுகளில், 177 நாடுகளின் ஒருமித்த ஆதரவைப் பெற்ற முன்மொழிவாக சாதனை படைத்துள்ளது. ஐ நா பொதுச் சபையின் தீர்மானத்தில், "யோகா உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு முழுமையான அணுகுமுறையை வழங்குகிறது. மேலும், இது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நல்லிணக்கத்தை உருவாக்குகிறது. எனவே, உடல் ஆரோக்கியத்திற்காக, யோகா பயிற்சி மேற்கொள்வதன் நன்மைகள்



## யோகா: பயிற்சியும், கல்வியும்

- யோகாவை ஊக்குவிப்பதிலும், பிரபலப்படுத்துவதிலும், பயிற்சிக்கு சிறப்பு முக்கியத்துவம் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் வாயிலாக வெவ்வேறு நிலைகளில் ஆயுஷ் அமைச்சகம் பயிற்சி வழங்குகிறது.
- தற்போது நாடு முழுவதும் ஏறத்தாழ 183 பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில், யோகா சம்பந்தமான பாடம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த பல்கலைக்கழகங்கள் யோகா பயிற்சிகளை வழங்குகின்றன.
- யோகா பயிற்சி மற்றும் சான்றளிப்பிற்காக, பிரத்தியேகமாக யோகா சான்றிதழ் வாரியம் உருவாக்கப்பட்டது.
- யோகா சான்றிதழ் வாரியத்தின் கூற்றுப்படி, இது வரை 9600–க்கும் அதிகமான மதிப்பீடுகள், சுமார் 480 தேர்வுகள், மொழி சார்ந்த 14 தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் 56 நாடுகளைச் சேர்ந்த தேர்வர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனர்.
- உலகம் முழுவதும் தற்போது 30 மில்லியன் யோகா பயிற்றுநர்கள் இருப்பதாக தரவு ஒன்று தெரிவிக்கிறது. இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 35 மில்லியனை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- யோகா பயிற்சி நிபுணர்களின் சான்றழிப்பு, யோகா பயிற்சி நிறுவனங்களின் சரிபார்ப்பு, யோகா வல்லுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுக்கு அங்கீகாரம் அளித்தல், பணியமர்த்தல் தரநிலைகளுக்கு இணங்க யோகா பயிற்சி நிறுவனங்களுக்கு தர மதிப்பீடு வழங்குதல் போன்ற செயல்பாடுகளைத் தற்போது யோகா சான்றளிப்பு வாரியம் மேற்கொள்கிறது.
- இது மட்டுமின்றி, வெளிநாடுகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில், யோகாவிற்கென தனித்துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், உலகம் முழுவதும் யோகா பயிற்சிப் பள்ளிகள், நிறுவனங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அமெரிக்க விளையாட்டு மருத்துவக் கல்லூரியின் சிறந்த 10 உடற்பயிற்சிகளில், யோகா, 7–வது இடத்தைப் பிடித்துள்ளது. யோகாவை ஒரு விளையாட்டுப் போட்டியாக இந்திய அரசு தற்போது அறிவித்துள்ளது.







குறித்த தகவல்களை உலக மக்களிடையே பரவலாகக் கொண்டு சேர்ப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்."

இதன் மூலம், இந்தியாவில் முழுமையான, உடல் ஆரோக்கியப் புரட்சிக்கான ஒரு புதிய யுகம் தொடங்கியுள்ளது. இது நோயைக் குணப்படுத்துவதைக் காட்டிலும், நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஐநா சபையில் யோகா குறித்த தீர்மானத்தை, இந்தியா முன்வைத்தபோது, உலகின் பெரும்பான்மையான நாடுகள் உடனடியாக அதற்கு இசைவு தெரிவித்த முதல் தீர்மானமாக அமைந்தது என்று ஐநா சபையின் பதிவுகள் உணர்த்துகின்றன. மேலும், ஐ நா சபையின் வரலாற்றிலேயே மிகக் குறுகிய காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானமாகவும் இது அமைந்துள்ளது.

## சர்வதேச யோகா தினம் – 2026

மேற்கு வங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவில், 2026 ஜூன் 21 அன்று சர்வதேச யோகா தினத்தின் முக்கிய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டத்தின் கருப்பொருள் 'ஆரோக்கியமான முதுமைக்கு யோகா' என்பதாகும். இது உடல் நலம், மன நலம், ஆரோக்கியமான முதுமை ஆகியவற்றை மேம்படுத்துவதில் யோகாவின் பங்களிப்பை முன்னிலைப்படுத்துகிறது.



### யோகாவை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான முயற்சிகள்

நாடு சுதந்திரம் அடைந்த பின், பொது சுகாதாரத் திட்டங்களில், யோகாவை இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இத்தகைய முயற்சிகளின் முன்னேற்றம் மிக மெதுவாக இருந்த நிலையில், யோகா அதற்கான அங்கீகாரத்தைப் பெறத் தவறியது. 1976-ல், யோகாவிற்கான முதலாவது மத்திய ஆராய்ச்சி நிறுவனம் (தற்போது மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது) உருவாக்கப்பட்டது. 1978-ல், யோகா, இயற்கை மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சி கவுன்சில் நிறுவப்பட்டது. 2003-ல், 'இந்திய மருத்துவ முறைகள், ஹோமியோபதி துறை' என்பது 'ஆயுஷ் துறை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனினும், நவம்பர் 9, 2014 அன்று, இதற்கெனத் தனி அமைச்சகமாக 'ஆயுஷ் அமைச்சகம்' உருவாக்கப்பட்டது. இத்துறைக்குக் கிடைத்த மிகப்பெரிய உந்து சக்தியாக அமைந்தது. மேலும், ஐநா சபையில் பிரதமர் மோடி ஆற்றிய உரை, யோகாவிற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. இதனைத் தொடர்ந்து, யோகா உலக நாடுகள் முழுவதும் ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. அத்துடன், பிப்ரவரி 2016-ல், 'யோகா, இயற்கை மருத்துவத்திற்கான தேசிய வாரியம்' என்ற சிறப்பு வாரியத்தை மத்திய அரசு அமைத்தது. இந்தக் கட்டமைப்பின் கீழ், நாட்டில் யோகா பயிற்சியின் தரத்தை மேம்படுத்த, எய்ம்ஸ், ஐஐடி போன்ற முன்னணி நிறுவனங்களின் துறை சார்ந்த நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டனர். ஆண்டுதோறும் நடைபெறும் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதில், இந்தியா முக்கியப் பங்காற்றி வருகிறது. அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் அமைப்பாகச் செயல்படும் மத்திய ஆயுஷ் அமைச்சகம், இந்தக் கொண்டாட்ட நிகச்சிகளுக்கான 'பொது யோகா நெறிமுறை'யையும் வெளியிடுகிறது. கிராமப்புறங்களில், யோகாவை ஊக்குவிக்கவும், பரப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென தனியாக ஆஷா பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், யோகா குறித்த விழிப்புணர்வை, சேவையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஊடகங்களாக அவர்களைப் பயன்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

முதல் முறையாக, மத்திய ஆயுஷ் அமைச்சகம், மத்திய இளைஞர் நலன் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து, யோகாசனத்தை விளையாட்டுப் போட்டியாக அங்கீகரிப்பதற்கான முயற்சியைத் தொடங்கியுள்ளன. 'உடல்தகுதி இயக்க'த்தின் முக்கிய அங்கமாகவும், யோகா இணைக்கப்பட்டுள்ளது. யோகா குறித்த கல்வி, தற்போது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை உணர்ந்து, 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில், சுகாதாரம், உடற்கல்வியுடன், யோகாசனத்தையும் என்சிஇஆர்டி

> "தற்போதைய பரபரப்பான, விரைவான வாழ்க்கை முறையில், மனம், உடல், அறிவு, ஆன்மா ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம், யோகா ஒரு தனிமனிதனின் வாழ்வில் அமைதியை ஏற்படுத்துகிறது. தனிமனிதனை அவனது குடும்பத்துடன் இணைப்பதன் மூலம், யோகா குடும்பத்திற்குள் மகிழ்ச்சியை வளர்க்க உதவுகிறது. சமூகத்தின் தேவைகளை உணர்ந்து செயல்படும் வகையில், குடும்பங்களைச் செயல்பட வைப்பதன் மூலம், சமூகத்தில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கும் யோகா உதவும். இத்தகைய சமூகம், நாட்டை ஒற்றுமையுடன் பிணைக்கும் ஒரு கருவியாகத் திகழ்கிறது. இத்தகைய தன்மையுடைய நாடுகள், உலகிற்கு அமைதியையும், நல்லிணக்கத்தையும் கொண்டு வருகின்றன. சகோதரத்துவ உணர்வின் மூலம், மனிதகுலம் செழித்து வளர்கிறது. யோகா தனிமனிதன், குடும்பம், சமூகம், தேசம், உலகம், ஒட்டுமொத்த மனிதகுலம் என அனைத்தையும் ஒன்றிணைக்கிறது."
>
> - நரேந்திர மோடி, பிரதமர்

**யோகா 365... யோகா என்பது ஆண்டுதோறும் நடைபெறும் கொண்டாட்டமாக இருப்பதுடன், அன்றாடப் பயிற்சியாக உருவெடுக்க வேண்டும்**

2015–ல் தொடங்கப்பட்ட சர்வதேச யோகா தினம், உலகின் மிகப்பெரிய சுகாதார இயக்கங்களில் ஒன்றாக விரைவான வளர்ச்சி கண்டு வருகிறது. தற்போது, மத்திய அரசு இந்த தினத்தை ஒரு நாள் மட்டுமே கொண்டாடப்படும் நிகழ்வு என்பதிலிருந்து, அன்றாடப் பழக்க வழக்கமாக மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கில், 'யோகா 365' என்ற முன் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. தனிநபர்கள், நிறுவனங்கள், சமூகங்களை ஆண்டு முழுவதும் யோகா பயிற்சியில் ஈடுபடுத்துவதே இதன் குறிக்கோளாகும். தொடர்ச்சியான மக்கள் பங்கேற்பு, நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு, டிஜிட்டல் தளங்களின் பயன்பாடு ஆகியவற்றின் மூலம், உடல் ஆரோக்கியமும், நலவாழ்வும் அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், ஒரு பழக்கவழக்கமாகவும் மாற்றுவதற்கு 'யோகா 365' இயக்கம் முயற்சி மேற்கொள்கிறது. இந்த முன்முயற்சியின் கீழ், இலவச ஆன்லைன் யோகா பயிற்சி வகுப்புகளை நடத்தவும் மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இந்த வகுப்புகளில் எளிய யோகா பயிற்சிகள் தினமும் அளிக்கப்படுகின்றன.

**ஒருங்கிணைந்த புஜங்காசனத்திற்கான ஆசிய சாதனை**

ஜூன் 21 அன்று நடைபெறவுள்ள சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களுக்கு ஐம்பது நாட்களுக்கு முன்னதாக, கன்ஹா சாந்தி வனத்தில் 6,000–க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் ஒரே சமயத்தில் புஜங்காசனத்தை செய்தனர். ஒரே சமயத்தில் ஒரு யோகாசன பயிற்சி மேற்கொண்ட மிகப்பெரிய குழு, இந்த மகத்தான சாதனை 'ஆசிய சாதனை புத்தகத்தில்' அதிகாரபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது யோகா பயிற்சி மூலம் ஊக்குவிக்கப்படும் கூட்டுப் பங்கேற்பு, பகிரப்பட்ட நலவாழ்வு உணர்வை வெளிப்படுத்துகிறது.

## சர்வதேச யோகா தினம் பிரபலமடைந்து வருகிறது

**2025**



விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் மோடி முன்னிலையில், 3,00,000–க்கும் அதிகமான மக்கள் யோகா பயிற்சியில் பங்கேற்றனர். இதில், இரண்டு கின்னஸ் உலக சாதனைகள் படைக்கப்பட்டன. 1. ஒரே இடத்தில் நடைபெற்ற மிகப்பெரிய யோகாசன நிகழ்ச்சி. 2. மிகப்பெரிய அளவிலான கூட்டு சூரிய நமஸ்காரம்.

கருப்பொருள்: 'ஒரே பூமி, ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா'

**2024**



ஸ்ரீநகரில் ஏற்பாடு செய்யப்பட்ட யோகாசன நிகழ்ச்சியில், தனிநபர் மற்றும் சமூக நலவாழ்வை மேம்படுத்துவதில், யோகாவின் இரட்டைப் பங்களிப்பு இதற்கான கருப்பொருளை முன்னிலைப்படுத்தியது.

கருப்பொருள்: 'தனிநபர் மற்றும் சமூகத்திற்கான யோகா'

**2023**



2023–ல் ஐநா சபை தலைமையகத்தில் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்கள் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றன. இந்த யோகா நிகழ்ச்சியில், 135 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

கருப்பொருள்: 'வசுதைவ குடும்பகம்' (உலகம் ஒரே குடும்பம்) என்பதற்கான யோகா)

**2022**



கர்நாடக மாநிலம் மைசூரில், பிற பங்கேற்பாளர்களுடன் இணைந்து பிரதமர் மோடி யோகாசன பயிற்சி மேற்கொண்டார்.

கருப்பொருள்: 'மனிதகுலத்திற்கான யோகா'

**2021**



உலக அளவில், பெருந்தொற்றுப் பரவல் சூழலைக் கருத்தில் கொண்டு, பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றினார். உலக சுகாதார அமைப்பின் 'எம்யோகா' செயலி அறிமுகம் செய்யப்பட்டது.

கருப்பொருள்: 'நலவாழ்விற்கான யோகா'

**2020**



உலக அளவில், கொவிட்–19 பெருந்தொற்றுப் பரவல் நெருக்கடி காரணமாக, பொதுக் கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. எனினும், இந்நிகழ்ச்சி காணொலி வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டது.

கருப்பொருள்: 'இல்லங்களில் யோகா & குடும்பத்தினருடன் யோகா'

**2019**



ராஞ்சியில், யோகாசனப் பங்கேற்பாளர்களுடன் இணைந்து, பிரதமர் மோடி, சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடினார்.

கருப்பொருள்: "இதய நலத்திற்கான யோகா"

**2018**



டேராடூனில், 50,000 பங்கேற்பாளர்களுடன் இணைந்து, பிரதமர் நரேந்திர மோடி, யோகாசனம் செய்தார்.

கருப்பொருள்: "அமைதிக்கான யோகா"

**2017**



லக்னோவில், 51,000 பங்கேற்பாளர்களுடன் சர்வதேச யோகாசன தினம் கொண்டாடப்பட்டது. இதில், ஒருவரின் வாழ்க்கை முறையில் யோகாசனத்தின் அவசியம் குறித்து பிரதமர் மோடி எடுத்துரைத்தார்.

கருப்பொருள்: "உடல் ஆரோக்கியத்திற்கான யோகா"

**2016**



சண்டிகரில், அதிகாரபூர்வ யோகாசன நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், பிரதமர் மோடி முன்னிலையில், 30,000 பேர் பங்கேற்றனர்.

கருப்பொருள்: "நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான யோகா"

**2015**



புது தில்லியில் உள்ள 'கடமைப் பாதையில்' நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சியில், 35,985 பேர் பங்கேற்றனர். இதில், இரண்டு கின்னஸ் உலக சாதனைகள் படைக்கப்பட்டன.

கருப்பொருள்: "நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கான யோகா"

**சர்வதேச யோகா தினம் 2026–க்கான கருப்பொருள்: 'ஆரோக்கியமான முதுமைக்கு யோகா'**

இணைத்துள்ளது.

இறுதியாக, 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 12,500 'ஆயுஷ்' சுகாதாரம், நலவாழ்வு மையங்கள் மூலம் யோகா பயிற்சியை வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**காலத்தால் அழியாத கலாச்சாரப் பாரம்பரியம்**

தற்போது டேராடூன் முதல் டப்ளின் வரையிலும், ஷாங்காய் முதல் சிகாகோ வரையிலும், ஜகார்த்தா முதல் ஜோகன்னஸ்பர்க்





வரையிலும் யோகா பரவியிருப்பது இந்திய மக்களுக்குப் பெருமை அளிப்பதாக உள்ளது. பல்லாயிரக்கணக்கான அடி உயரமான இமயமலை சிகரங்களுக்கு இடையில், பாலைவனத்தின் சுட்டெரிக்கும் வெப்பத்தில், என எத்தகையச் சூழலிலும், யோகா ஒவ்வொருரின் வாழ்க்கையையும் வலுப்படுத்துகிறது. "பிரிவினை சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் போது, பிளவுகள் ஏற்படுவதாக பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். தனிநபர்கள், சமூகங்கள், நாடுகளுக்கு இடையே இத்தகைய பிரிவினைகள் ஏற்படுகின்றன. சமூகக் கட்டமைப்பிற்குள் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. குடும்பங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வளர்கின்றன. மேலும், தங்களின் வாழ்க்கையில் மன அழுத்தம் அதிகரிக்கும் போது, தனிநபர்கள் உள்ளுக்குள் உடைந்து போகிறார்கள். இத்தகைய பிளவுகளுக்கு இடையே, யோகா மக்களை ஒன்றிணைக்கிறது. மக்களை ஒருங்கிணைக்கும் பணியை யோகா செய்கிறது," என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

யோகாசனப் பயிற்சி காரணமாக, ஏராளமான புதிய பயிற்சி மையங்கள் உருவாகி வருகின்றன. யோகாசனம் பயிற்றுவிப்பாளர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. தற்போது, அதிக அளவிலான இளைஞர்கள், யோகாவை தொழில்முறை சார்ந்த வாய்ப்பாக ஏற்றுக்கொள்கின்றனர். யோகாவை தொழில்முறை அம்சமாகத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு, இந்தப் பயிற்சி மையங்களில், பயிற்சி பெற்றுக் கொள்கின்றனர். உலக அளவில், இந்திய யோகா பயிற்றுவிப்பாளர்களுக்கான தேவை அதிகரித்து வருவதுடன், யோகா புதிய வேலைவாய்ப்புக்கானச் சந்தையை உருவாக்கியுள்ளது. இத்தகைய முயற்சிகள் அனைத்திலும், உலக அளவில் இந்தியர்கள் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு, யுனெஸ்கோ அமைப்பு, யோகாவை "மனிதகுலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியம்" என்று அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள அமைப்புகள் தற்போது பள்ளிகள், கல்லூரிகளின் பாடத்திட்டங்களில், யோகாசனப் பயிற்சியை இணைத்து வருகின்றன. தற்போது, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களும், தங்களது மாநிலக் கல்விக் கட்டமைப்பில், யோகாவை இணைத்துள்ளன. இதன் மூலம், எதிர்காலத் தலைமுறையினர் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த அறிவியல் சார்ந்த கலையை அறிந்துகொள்வதற்கும், யோகாசனப் பயிற்சி மேற்கொள்வதையும், தங்களது வாழ்வின் ஓர் அங்கமாக அதனை மாற்றிக்கொள்வதையும் உறுதி செய்கின்றன.

யோகாவுக்குக் கிடைத்துள்ள உலக அளவிலான அங்கீகாரம், அதனை இந்தியாவின் "மென்சக்திக்கான முன்முயற்சியாக" நிலைநிறுத்தியுள்ளது. ஒரு நாட்டின் அறிவுசார், கலாச்சாரத் தாக்கம், அதாவது, அதன் மென்சக்தி, அந்த நாட்டில் சமூகத்தின் ஆக்கபூர்வமான விருப்பங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது. அதேசமயம், அரசு அதன்

## வளர்ந்து வரும் யோகா சந்தை

- இந்தியாவில் யோகா 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறு கொண்டது.
- அலைடு மார்க்கெட் ரிசர்ச் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, 2019–ல், இதன் உலக அளவிலான சந்தை மதிப்பு 37.5 பில்லியன் டாலராக இருந்தது.

**$66.4** பில்லியன் டாலராக உலக அளவில் யோகாவிற்கான சந்தை மதிப்பு 2027–க்குள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**$156.11** பில்லியன் டாலர் 2021–ல், உலக அளவில், யோகா சார்ந்த சுற்றுலாச் சந்தையின் கணிக்கப்பட்ட மதிப்பீடாக இருந்தது.

**5.8%** வளர்ச்சி உலக அளவில் ஆண்டுதோறும் ஏற்படும் என்று www.grandviewresearch.com என்ற இணையதள ஆய்வுவின்படி, 2022–க்கும் 2030–ம் ஆண்டுக்கும் இடையிலான காலத்தில், உலக அளவில், யோகா சார்ந்த சுற்றுலாச் சந்தையில் கணிக்கப்பட்டுள்ளது.





சிந்து–சரஸ்வதி சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த சிதைவுகள், முத்திரைகளில், யோகாசனப் பயிற்சி மேற்கொள்ளும் மக்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இவை, இந்தியாவில் யோகக்கலை இருந்ததற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

## விரிவடைந்து வரும் யோகக்கலை

**6+**
லட்சத்திற்கும் அதிகமான தன்னார்வலர்களுக்கு மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனத்தால், யோகாசனப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**7+**
லட்சத்திற்கும் அதிகமான யோகக்கலை நிபுணர்கள், தன்னார்வலர்களுக்கு யோகா சான்றிதழ் வாரியக் கட்டமைப்பின் கீழ், சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**70+**க்கும் அதிகமான கல்லூரிகள் இயற்கை மருத்துவம், யோகக்கலை அறிவியலில் இளங்கலைப் பட்டம் வழங்குகின்றன

**5,000+**
யோகாசனப் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

**190+**
நாடுகளில் சர்வதேச யோகா தினம், தற்போது, கொண்டாடப்பட்டு வருகிறது.

**25** மில்லியன் குடும்பங்களில், குறைந்தது ஒரு நபராவது தினமும் யோகா பயிற்சி செய்பவர்களாக ஒரு தேசிய அளவிலான ஆய்வின்படி, இந்தியாவில் உள்ளனர்.



உலக அளவில் யோகாவிற்குக் கிடைத்துள்ள பெரும் வரவேற்பு காரணமாக, கடந்த பத்தாண்டுகளில், சர்வதேச அளவில், யோகாவுக்கான சந்தை ஐந்து மடங்கு வளர்ச்சியை எட்டியுள்ளது.

வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. 2014–ம் ஆண்டிற்கு முன், வெளிநாடுகளில் மக்கள் யோகாசனப் பயிற்சி மேற்கொண்டு வந்தனர். எனினும், பிரதமர் மோடியின் முயற்சியால், ஐ நா சபை ஜூன் 21–ம் தேதியை "சர்வதேச யோகா தினம் அறிவித்தது. இந்த அறிவிப்பு, யோகாவை உலக அளவிலான கொண்டாட்டமாக மாற்றியுள்ளது. தற்போது, யோகா உலகின் மாபெரும் கலாச்சார விழாவாகத் திகழ்கிறது. இந்தியாவில் தோன்றிய யோகா, அனைவரும் கட்டணமின்றி மேற்கொள்ளும் ஒரு கலையாகவும், பயிற்சியாகவும் உள்ளது. முதல்முறையாக, சர்வதேச யோகா தினம் 2015–ம் ஆண்டு ஜூன் 21 அன்று கொண்டாடப்பட்டது. யோகாவின் தனித்துவ சிறப்பம்சங்கள், நன்மைகள் குறித்த நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டதன் மூலம், பிரதமர் மோடி, உலக அரங்கில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார். சர்வதேச யோகா தினத்தின் பரவலான தாக்கம், நாட்டைக் கட்டமைக்கும் ஒவ்வொரு செயல்முறையிலும், நடவடிக்கைகளிலும், முனைப்புடன் பங்கேற்க, சிறந்த உடல் ஆரோக்கியத்தைப் பராமரிப்பது அவசியம் என்ற உணர்வை ஒவ்வொரு இந்தியக் குடிமகனிடமும் ஏற்படுத்தியுள்ளது. மேம்பட்ட சுகாதார வசதிகள், சராசரி ஆயுட்காலத்தை அதிகரித்துள்ளன என்பதையும், அதன் மூலம் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டு வருகிறது என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. இந்த மேம்பட்ட செயல்திறன், செயல்முறை சார்ந்த யோகக்கலையாக உருவெடுத்துள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார வலிமைக்கு, ஆரோக்கியமான வாழ்க்கை முறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை, சராசரி ஆயுட்காலத்தில் ஏற்படும் ஓராண்டு அதிகரிப்பு கூட நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்துகிறது என்ற உண்மையின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.





**51,000–க்கும் அதிகமான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன**

# இளைஞர்களின் முன்னேற்றம்

## வளர்ச்சியடைந்த இந்தியாவின் வலிமை

இந்திய இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை வழங்குவதில், மத்திய அரசு உறுதியுடன் உள்ளது. இந்த முயற்சியில், 'வேலைவாய்ப்பு முகாம்' ஒரு முக்கிய முன்முயற்சியாகத் திகழ்கிறது. இதுவரை நாடு முழுவதும் 19 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 12 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும், 47 இடங்களில், ஒரே நேரத்தில் நடைபெற்ற 19–வது வேலைவாய்ப்பு முகாமின் போது, மே 23 அன்று, அரசுப் பணிகளைப் பெற்ற 51,000–க்கும் அதிகமான இளைஞர்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி பணி நியமன ஆணைகளை வழங்கினார்...

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில், இந்தியாவின் இளைஞர்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். தற்போது, ஒவ்வொரு இந்தியரும், ஒரு மகத்தான உறுதியுடன் முன்னேறி வருகின்றனர். இது 2047–க்குள், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் உறுதிமொழியாகும். வேலைவாய்ப்பு முகாமில், பணி நியமன ஆணைகளை வழங்கும் போது, இந்தியாவில், பல்வேறு திட்டங்கள், முன்முயற்சிகளில் பொது, தனியார் துறைகள் இணைந்து பெரும் முதலீடுகளைச் செய்து வருவதாகப் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். இந்த முதலீடுகள் நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், அவர்களின் கனவுகளை நனவாக்க உதவுகின்றன. பணி நியமன ஆணைகளைப் பெற்ற இளைஞர்கள், அரசு ஊழியர்களாகப் பயணத்தைத் தொடங்குகிறீர்கள். எனவே, நாட்டிற்கு 'வணிகம் செய்வதை எளிதாக்குதல்' நடவடிக்கை எவ்வளவு அத்தியாவசியம் என்பதை, இளைஞர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

தற்போது, இந்தியாவில் உள்ள இளைஞர்கள், முன்னெப்போதும் இல்லாத வகையில், முன்னேறுவதற்கும், தங்களது கனவுகளை நனவாக்குவதற்கும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இளைஞர்களுக்கு, உற்பத்தி, தொழில்நுட்பம்,

> "தற்போது, இந்தியாவில் உள்ள இளைஞர்கள், உலகம் முழுவதும் ஒவ்வொரு துறையிலும், தங்களது முத்திரையைப் பதித்து வருகின்றனர். இதே மனப்பான்மையும், இதே ஆற்றலும் பொதுச் சேவையிலும் பிரதிபலிக்க வேண்டும். தங்கள் பணியை நாட்டிற்குச் சேவை செய்வதற்கான வழிமுறையாகக் கருதும் இத்தகைய இளைஞர்களின் முயற்சிகள் வாயிலாக 'வளர்ச்சியடைந்த இந்தியா' கட்டமைக்கப்படும்."
>
> – நரேந்திர மோடி, பிரதமர்

புத்தொழில் நிறுவனங்கள், டிஜிட்டல் சேவைகள், ரயில்வே, பாதுகாப்பு, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள், இத்தகைய புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்றும், தங்களின் திறமைகளை வெளிப்படுத்த, அனைத்து விதமான வாய்ப்புகளையும் பெறுவதை உறுதி செய்வதே அரசின் நோக்கம் என்றும்

### பல்வேறு அமைச்சகங்கள், துறைகளில் பணியாற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, 19–வது 'வேலைவாய்ப்பு முகாம்' நிகழ்ச்சியில், பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ள புதிய பணியாளர்கள், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகளில் (எ.கா: ரயில்வே அமைச்சகம், உள்துறை அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், நிதிச் சேவைகள் துறை, உயர்கல்வித் துறை போன்றவை) தங்களின் பணிகளைத் தொடங்கவுள்ளனர்.

### இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை வழங்குவதில், மத்திய அரசு உறுதியுடன் உள்ளது

- மத்திய அரசு, அதனுடன் இணைந்து செயல்படும் மாநில அரசுகள், மூலம் லட்சக்கணக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பெண்கள், மாற்றுத்திறனாளிகள், 'முன்னேற விரும்பும் மாவட்டங்களைச்' சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு சிறப்புச் சலுகைகள்.
- யுபிஎஸ்சி, எஸ்எஸ்சி, ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம், ஐபிஎஸ் போன்ற உயர்நிலையிலானத் தேர்வுகள் மூலம், பணி நியமனங்கள் செய்யப்படுகின்றன.
- சம வாய்ப்பை உறுதிசெய்யும் வகையில், 13 மாநில மொழிகளில், பணியாளர் சேர்க்கைக்கான தேர்வுகள் நடத்தப்படுகின்றன.
- ஐகாட்–கர்மயோகி இணையதளத்தில் உள்ள 4,800–க்கும் அதிகமான உயர்தர மின்னணு கற்றல்முறை பாடத்திட்டங்கள் மூலம், 1.65 கோடிக்கும் அதிகமான பணியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.
- வெளிப்படையான, தகுதி அடிப்படையிலான ஆட்சேர்ப்பு நடைமுறை, இளைஞர்களின் கனவுகளுக்குப் புதிய சிறகுகளை அளிக்கிறது.

பிரதமரின் நிகழ்ச்சியைக் காண கியூ குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.


தெரிவித்தார்.

இதன் விளைவாக, திறன் மேம்பாடு, தொழில்துறை சார்ந்த கல்வி, எதிர்காலத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்கள் நவீனமயமாக்கப்படுவதுடன், தேசிய திறன்மேம்பாட்டுப் பயிற்சி நிலையங்கள் வலுப்படுத்தப்படுகின்றன. 'பிஎம் சேது' போன்ற முன்முயற்சிகள், முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

### அதிகரித்து வரும் இந்திய மக்களின் எதிர்பார்ப்புகள்

தற்போது, இந்திய மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இது வளர்ச்சியின் நேர்மறையான அறிகுறியாகும். இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, சக குடிமக்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொள்வதுடன், அவற்றை நிறைவேற்றுவதற்கான முனைப்புடன், விரைவாக செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இத்தகைய

### 'வேலைவாய்ப்பு முகாம்' இளைஞர்களுக்கு, அரசு வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.




சூழலில், பொதுச் சேவையில் இணையும் இளம் ஆர்வலர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது. இளைஞர்கள் தொடர்ந்து கற்றுக்கொள்ளவும், புதிய தொழில்நுட்பங்கள், புதிய அமைப்புகள், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக்கொள்ளவும் வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார். இந்த முயற்சியில், ஐகாட்–கர்மயோகி தளம் இளையோருக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும். 'கர்மயோகி பிராரம்ப்' போன்ற பாடத்திட்டங்கள், அவர்களின் பொறுப்புகளை முழுமையாகப் புரிந்து கொள்வதை எளிதாக்கும். இதுபோன்ற வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன். ●

மத்திய அமைச்சரவை முடிவுகள்

# உணவுப் பாதுகாப்புக்கும் தூய்மையான போக்குவரத்துக்கும் புதிய உத்வேகம்

ஏழைகளுக்கான நலத்திட்டங்கள் மேலும் வெளிப்படையானதாகவும் திறன் வாய்ந்த முறையிலும் மக்களைச் சென்றடைய மத்திய அரசு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. இந்த நோக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், சார்தேக்–பிடிஎஸ் திட்டத்தின் (பொது விநியோக திட்டத்தில் தானியங்கி இயக்கத்துடன் கூடிய ரேஷன் போக்குவரத்து, கையாளுதலுக்கான உதவித் திட்டம் இரண்டாம் கட்டத்திற்காக 25,530 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் பயனாளிகள் பதிவேட்டை உருவாக்குதல், ஜிபிஎஸ் கண்காணிப்பு, கியூஆர் குறியீடு போன்ற உயர் தொழில்நுட்ப அம்சங்கள் மூலம், மானிய விலையில் வழங்கப்படும் உணவு தானியங்கள், பிற நலத்திட்ட உரிமைகள் உட்பட 100% பலன்களும் நேரடியாக ஏழைகளுக்குச் சென்றடைய வகை செய்யப்படும். மேலும், உள்கட்டமைப்பு தொடர்பான பல்வேறு திட்டங்களுடன், தில்லி–தேசிய தலைநகரப் பகுதிக்குள் பழைய லாரிகளையும் பேருந்துகளையும் மாற்றுவதற்கான திட்டம் உள்ளிட்ட பல முன்மொழிவுகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



அமைச்சரவை முடிவு குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண, இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**முடிவு:** தில்லி தேசிய தலைநகர்ப் பகுதியில் உள்ள பழைய லாரிகள், பேருந்துகளுக்கு பதிலாக பிஎஸ்-VI தரத்திலான அல்லது மின்சார வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன; இது தொடர்பான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** இந்த மாற்றுத் திட்டத்தில் தில்லி தேசிய தலைநகர்ப் பகுதியில் உள்ள சுமார் 191,000 லாரிகளும் 16,329 பேருந்துகளும் இடம் பெறும். இந்த முயற்சி, இப்பகுதியில் காற்று மாசுபாட்டைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறையை மேம்படுத்தி, இப்பகுதியின் ஒட்டுமொத்த காற்றின் தரத்தில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**முடிவு:** ஒடிசாவில், ராமேஸ்வரிலிருந்து பாராதீப் வரை ஒரு புதிய கடலோர நெடுஞ்சாலை கட்டுமானப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இது இரண்டு தொகுப்புகளாகக் கட்டப்படவுள்ள, மொத்தம் 160.18 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு பெரிய கடலோர நெடுஞ்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்). அரசு – தனியார் கூட்டு மாதிரி முறையின் கீழ் இது அமைக்கப்படுகிறது.

**தாக்கம்:** இந்தப் பிரிவின் மொத்த நீளம் 160.18 கிலோமீட்டர். இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 8,300.79 கோடி ரூபாய். இந்தத் திட்டங்கள் பிரதமரின் விரைவு சக்திப் பெருந்திட்டக் கொள்கைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. மேலும் 9 பொருளாதார மையங்களையும் 5 சரக்குப் போக்குவரத்து முனையங்களையும் இது இணைக்கும். இது நாட்டின் சரக்குப் போக்குவரத்து செயல்திறன் குறியீட்டில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் நிறைவடைந்ததும், ராமேஸ்வர் – பாராதீப் இடையேயான பயண நேரம் சுமார் 2 மணி நேரம் 30 நிமிடம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பயணிகள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து ஆகிய இரண்டிற்கும் பாதுகாப்பான, விரைவான, தடையற்ற இணைப்பை உறுதி செய்யும். மேலும், இந்தத் திட்டம் எரிபொருள் நுகர்வு, கார்பன் வெளியேற்றம், வாகன இயக்கச் செலவுகள் ஆகியவற்றைக் குறைக்கும்.

----------------------------

**முடிவு :** பீகாரில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 31, தேசிய நெடுஞ்சாலை 231 ஆகியவற்றின் ககாரியா–பூர்னியா பகுதியை (143.529 கிலோ மீட்டர்), கட்டமைத்தல், செயல்படுத்துதல், ஒப்படைத்தல் (சுங்கக் கட்டணம்) முறையில் 3,936.05 கோடி ரூபாய் செலவில் 4–வழிச்சாலையாகத் தரம் உயர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** இது ககாரியா, பகல்பூர், கதிஹார், பூர்னியா ஆகிய மாவட்டங்களின் நகர்ப்புறங்களில் தற்போதுள்ள கடும் கட்டமைப்புக் குறைபாடுகள், சிக்கலான வளைவுகள், போக்குவரத்து நெரிசல் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்கும். இந்தத் திட்டம், பூர்னியா நகரத்திற்காக சுமார் 7 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு விரிவாக்கப்பட்ட புதிய புறவழிச் சாலை மேம்பாட்டுப் பணிகளையும் உள்ளடக்கியது. இந்தத் திட்டம் சராசரி பயண வேகத்தை அதிகரிப்பது மட்டுமின்றி, பயண நேரத்தையும் சுமார் இரண்டு மணி நேரம்

**முடிவு:** பொது விநியோக அமைப்பில் ரேஷன் போக்குவரத்து, கையாளுதலில் தானியங்கி உதவித் திட்டத்தை (சார்த்தேக்–பிடிஎஸ்) ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகத் தொடர்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**தாக்கம்:**

- ரேஷன் போக்குவரத்து உதவித் திட்டம், திறன்மிகு பொது விநியோக அமைப்பு ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து, இதற்கு 'சார்த்தேக்–பிடிஎஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்களுக்குள் உணவு தானியங்களைக் கொண்டு செல்வதற்கும் கையாளுவதற்கும் செய்யும் செலவினங்களுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் உதவிக்கான விதிமுறைகளில் திருத்தம்.
- எஃப்பிஎஸ் டீலர்களுக்குத் தற்போதுள்ள மத்திய அரசின் நிதியுதவி, அடிப்படை உதவி ஆகியவை தொடரும்.
- அதிக செயல்திறன் மிக்க, வெளிப்படையான, தொழில்நுட்பத்துடன் பொது விநியோகத் திட்ட முறைக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- என்எஃப்எஸ்ஏ–யின் திறன் மிக்க செயலாக்கத்தை வலுப்படுத்த, ஒருங்கிணைந்த, ஒன்றோடொன்று இணைந்து இயங்கக்கூடிய ஒரு பொது விநியோகக் கட்டமைப்பு உருவாக்கப்படும்.
- பொது விநயோகத் திட்ட செயல்பாடுகளை நவீனமாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவு, எந்திரக் கற்றல், இயற்கை மொழி செயல்முறை (என்எல்பி) பிளாக்செயின் ஆகிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும்.
- உடனடி கண்காணிப்பு, செயற்கை நுண்ணறிவு குறைதீர்ப்பு முறை உருவாக்கப்படும்.



**₹25,530**

கோடி ரூபாய் மத்திய செலவினத்திற்கு ஒப்புதல் 16– வது நிதி ஆணையத்தின் காலத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

**81.35**

கோடி பயனாளிகள் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனடைவார்கள். இது நாட்டின் உணவுப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

**இத்திட்டம் 2031 மார்ச் 31 வரை செயல்பாட்டில் இருக்கும்**

- ஆதார் இணைப்பு, இ–பிஓஎஸ் தானியங்கி முறை, கணினிமயமாக்கப்பட்ட விநியோகத் தொடர் மேலாண்மை ஆகியவை மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் அனைத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

குறைக்கும். இது சாலைப் பாதுகாப்பு, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதுடன் வாகனப் போக்குவரத்துச் செலவுகளையும் குறைக்கும்

**முடிவு:** உள்நாட்டு சர்வதேச விமானப் பயணங்களுக்கான விமான எரிபொருள் விலையில் நிலைத்தன்மையைப் பேணுவதற்கு, பட்டியலிடப்பட்ட இந்திய விமான நிறுவனங்களுக்கு உதவும் வகையில், எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு 10,000 கோடி ரூபாய் வரை ஒரு முறை ஆதரவு வழங்கும் முடிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**தாக்கம்:** பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் ஒதுக்கீடுகள் வழியாக, எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு வட்டியில்லா முன்பணமாக நிதி உதவி வழங்கப்படும். மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி காரணமாக எரிபொருள் விலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்ற இறக்கங்களைத் தொடர்ந்து சந்தித்து வருகிறது. இந்தக் காலகட்டத்தில் ஏடிஎஃப் (விமான எரிபொருள்) விலை, நிலையாக இருப்பதை உறுதி செய்வதற்காக, எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது.

**முடிவு:** தேசிய நெடுஞ்சாலை–63–ன் தற்போதுள்ள ஆர்மூர்–ஜக்தியால்–மஞ்சேரியல் பகுதியை அரசு – தனியார் மாதிரியின் கீழும், தேசிய நெடுஞ்சாலை–563–ன் ஜக்தியால்–கரீம்நகர் பகுதியை கட்டமைத்தல், செயல்படுத்துதல், ஒப்படைத்தல் (சுங்கக் கட்டணம்) முறையின் கீழும் 4–வழிச்சாலையாக அகலப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** இந்தப் பிரிவுகளின் மொத்த நீளம் 190.76 கிலோ மீட்டர் ஆகும். திட்டத்தின் உத்தேச செலவு 7,500 கோடி ரூபாய். பணிகள் முடிந்த பின், பயண நேரம் குறையும். பாதுகாப்பான, வேகமான, தடையற்ற போக்குவரத்து இணைப்பு உறுதி செய்யப்படும். மேலும், இந்தத் திட்டம் எரிபொருள் பயன்பாடு, கரியமில வாயு வெளியேற்றம், வாகன இயக்கம் ஆகியவற்றிற்கான செலவுகளைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கும்.

**முடிவு :** மத்தியப் பிரதேசத்தில், தேசிய நெடுஞ்சாலை–347பி–யின் 125 கிலோ மீட்டர் நீளமுள்ள ஹிவர்கேடி – ரோஷ்னி – அஷாபூர் – ரூதி பகுதியை 2–வழிச் சாலையாகத் தரம் உயர்த்துதல், ஏறக்குறைய 109 கிலோ மீட்டர் நீளமுள்ள தேஷ்காவ்ன் – ஜுல்வானியா பகுதியை 4–வழிச் சாலையாக அகலப்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் அரசு – தனியார் கூட்டுப் பங்களிப்பு முறையில் மேற்கொள்ளப்படும்.

**தாக்கம்:** இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 4,415.60 கோடி ரூபாய் ஆகும். இதனால் சராசரி பயண வேகம் அதிகரிக்கும். போக்குவரத்து இணைப்பு மேம்படும். சாலைப் பாதுகாப்பு, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டு வாகன இயக்கச் செலவுகள் குறையும். இத்திட்டம் மத்தியப் பிரதேசத்தின் முக்கியப் பொருளாதார, சமூக, சரக்குப் போக்குவரத்து மையங்களைத் தடையின்றி இணைக்கும்.




பத்ம விருதுகள் 2026

# தேசத்தின் நாயகர்களைப் போற்றுதல்

**குடியரசுத் தலைவர் மாளிகையின் கணதந்திர மண்டபம், தேசத்தின் தனித்துவமான திறமைகள், அசாதாரணமான சேவை, அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவற்றின் பிரகாசத்தால் மீண்டும் ஒருமுறை ஒளிர்ந்தது. 2026 மே 25 அன்று, பிரமாண்டமாக நடைபெற்ற இந்த ஆண்டுக்கான முதலாவது பத்ம விருது வழங்கும் விழாவின் போது, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, 2026-ம் ஆண்டில் பத்ம விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 131 பேரில் 66 சிறந்த ஆளுமைகளுக்கு மதிப்புமிக்க பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ விருதுகளை வழங்கி கௌரவித்தார்.**

விழாவின் முதல் கட்டத்தில், 2 பத்ம விபூஷன், 6 பத்ம பூஷன், 58 பத்ம ஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு வெறும் விருது வழங்கும் விழாவாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, தங்களின் அயராத உழைப்பால் தேசத்தைச் சிறப்பாக மாற்றியமைத்த சாமானிய மக்களின் அர்ப்பணிப்பையும் சாதனைகளையும் கொண்டாடும் ஒரு நிகழ்வாக அமைந்தது. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கலை, இலக்கியம், சமூக சேவை, அறிவியல், தொழில் போன்ற துறைகளில் தங்கள் பங்களிப்புகளால் நாட்டின் பெருமையை உயர்த்திய இந்தியாவின் மகன்களும் மகள்களும் கௌரவிக்கப்பட்டனர். இந்தியாவின் உயரிய விருதுகளில் தங்களுக்கு ஓர் இடத்தைப் பெற்ற அந்தத் தனித்துவமான ஆளுமைகளின் கதைகள் அடங்கிய தொகுப்பு இது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், 2026 ஜனவரி 25 அன்று, மத்திய அரசு 2026-ம் ஆண்டுக்கான 131 பத்ம விருது பெறுபவர்களின் பெயர்களை அறிவித்தது.




## பத்ம விபூஷன்



### தர்மேந்திர சிங் தியோல் (மரணத்திற்குப் பிந்தைய விருது)

இந்தியத் திரையுலகின் ஒரு புகழ்பெற்ற நடிகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இவர், இந்தித் திரையுலக வரலாற்றில் மிகவும் பன்முகத்தன்மை வாய்ந்த, வெற்றிகரமான நடிகர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். பாலிவுட்டின் 'ஹீ–மேன்' என்று பிரபலமாக அறியப்படும் இவர், அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு அற்புதமான நீண்ட திரைப்பயணத்தை மேற்கொண்டார். இவர் 300–க்கும் அதிகமான படங்களில் நடித்ததோடு, இந்தித் திரையுலகில் அதிக எண்ணிக்கையிலான வெற்றிப் படங்களைத் தந்தவர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். கலைத்துறைக்கு அவர் ஆற்றிய வாழ்நாள் அர்ப்பணிப்புக்காக, எண்ணற்ற மதிப்புமிக்க விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றார். பாலிவுட்டிற்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், 1997–ல் அவருக்கு ஃபிலிம்ஃபேர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. 2012–ல், நாட்டின் மூன்றாவது உயரிய விருதான பத்ம பூஷன் விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. தமது திரையுலக சாதனைகளுக்கு அப்பால், தர்மேந்திரா 2004 முதல் 2009 வரை ராஜஸ்தானின் பிகானீர் தொகுதியின் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார். இவர் 1938 டிசம்பர் 08 அன்று பஞ்சாபில் உள்ள நஸ்ராலியில் பிறந்தார்.




## பத்மஸ்ரீ

- விஸ்வபந்து (மரணத்திற்குப் பின் விருது)
- பாரத் சிங் பாரதி
- தாகா ராம் பில்
- ஹர்மன்பிரீத் கவுர் புல்லர்
- ரத்திலால் மோகன்லால் போரிசாகர்
- குமார் போஸ்
- ஜனார்தன் பாபுராவ் போதே
- சுவாமி பிரம்மதேவ்
- புரோசென்ஜித் சாட்டர்ஜி
- தேவகி அம்மா ஜி
- டாக்டர் ராமச்சந்திர கோட்போலே
- சுனிதா கோட்போலே
- டெக்கி குபின்
- டாக்டர் ஹெச். வி. ஹண்டே
- கஃபாருதீன் மேவதி ஜோகி
- மீர் ஹாஜி கசம்
- ரகுவீர் கேத்கர்
- ஆர். கிருஷ்ணன் கீத்னா (மரணத்திற்குப் பிந்தைய விருது)
- பேராசிரியர் டாக்டர் லார்ஸ்–கிறிஸ்டியன் கோச்
- பேராசிரியர் மாமிடலா ஜகதீஷ் குமார்
- பிரவீன் குமார்
- கே. விஜயகுமார்
- ஸ்ரீரங் தேவ்பா லாட்
- அங்கேகவுடா எம்
- பேராசிரியர் (டாக்டர்) சரோஜ் மண்டல்
- பேராசிரியர் புத்த ராஷ்மி மணி
- நிலேஷ் வினோத்சந்திர மண்ட்லவாலா
- டாக்டர் மகேந்திர குமார் மிஸ்ரா
- திரிப்தி முகர்ஜி




## பத்ம விபூஷன்



### டாக்டர் (திருமதி) என். ராஜம்

இசைத்துறையின் மிகச்சிறந்த, புகழ்பெற்ற கலைஞர்களில் ஒருவரான இவர், வயலின் வாசிப்பதில் ஒரு வித்தகராகத் திகழ்கிறார். அவரது விரல்கள் வயலின் தந்திகளைத் தொடும் கணமே, அவர் ஒரு மயக்கும் சூழலை உருவாக்குகிறார். வயலினில் குரலிசை பாணியை வெளிப்படுத்தும் 'காயகி அங்' என்ற நுட்பத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியதன் மூலம் அவர் செவ்விசையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். இது அவருக்குப் 'பாடும் வயலின்' என்ற உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. எர்ணாகுளத்தில், இசை மரபுகளில் ஆழ்ந்த ஒரு குடும்பத்தில் 1939 மார்ச் 16 அன்று பிறந்த டாக்டர் ராஜம், தமது தந்தை வித்வான் ஏ. நாராயண ஐயரிடம் பயிற்சி பெற்று தமது இசை அடித்தளத்தை வளப்படுத்திக் கொண்டார். ஒரு கலைஞராக தமது புகழ்பெற்ற வாழ்க்கைக்கு அதிகமாக, டாக்டர் ராஜம் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் நிகழ்த்துக் கலைத் துறையில் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் பேராசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றினார். அவர் அத்துறையின் தலைவராக (ஹெச்ஓடி) உயர்ந்தார். பின்னர் ஒட்டுமொத்தமாக அப்பிரிவின் தலைவராகவும் (டீன்) பணியாற்றினார். அமெரிக்கா, கனடா, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் என உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் டாக்டர் ராஜம் இசை நிகழ்ச்சிகளை நடத்தி, பார்வையாளர்களைக் கவர்ந்தார். டாக்டர் ராஜம் பல மதிப்புமிக்க விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்துஸ்தானி இசைக்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பிற்காக, அவருக்கு 1984-ல் பத்மஸ்ரீ விருதும், 2004-ல் பத்ம பூஷன் விருதும், 1990-ல் சங்கீத நாடக அகாடமி விருதும் வழங்கப்பட்டன.




## பத்ம பூஷன்



### சதாவதானி டாக்டர் ஆர். கணேஷ்

சதாவதானி டாக்டர் ஆர். கணேஷ், இந்தியாவிற்கே உரித்தான ஒரு செவ்வியல் கலை வடிவமான அவதானம் நினைவில் வைத்தல் என்ற கலையில் ஒரு சிறந்த ஆசான் ஆவார். இக்கலையில், எழுதுகோல், காகிதம் போன்ற எந்த உதவியும் இன்றி, உடனடியாக இயற்றப்படும் கவிதைகளைக் கொண்டு பல்வேறு கவிதைச் சவால்களுக்குத் தீர்வு காண வேண்டும். இது படைப்பாற்றலையும் புலமையையும் உச்சகட்டமாகச் சோதிப்பதோடு, கலைஞரின் பலவித பணித் திறன்களை, புதிய கோணத்தில் சிந்தித்து வெளிப்படுத்தும் திறன் கொண்ட கலையாகும். கன்னடத்தில் இக்கலை வடிவத்திற்குப் புத்துயிர் அளித்த பெருமைக்குரிய இவர், இப்போதுவரை முதன்மையாக கன்னடம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் 1,300-க்கும் அதிகமான அஷ்டாவதானங்களையும், 5 சதாவதானங்களையும் நிகழ்த்தியுள்ளார். இவர் இக்கலையை அனைத்து வடிவங்களிலும் நிகழ்த்தி, பல புதுமையான கூறுகளை அறிமுகம் செய்து, இந்த தொன்மையான கலை வடிவத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க புதிய தலைமுறை இளம் கலைஞர்களுக்கு உத்வேகம் அளித்துள்ளார். கர்நாடகாவின் கோலாரில் 1962 டிசம்பர் 04 அன்று பிறந்த டாக்டர் ஆர். கணேஷ், எந்திரப் பொறியியலில் இளநிலைப் பட்டமும், பொருள் அறிவியல், உலோகவியல், சமஸ்கிருதம் ஆகியவற்றில் தலா ஒரு முதுநிலைப் பட்டமும், கன்னடத்தில் டி.லிட். பட்டமும் பெற்றுள்ளார். கவிதை இயல், யாப்பியல், இலக்கியம், தத்துவம், செவ்வியல் கலைகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஒரு பன்முகத்திறன் கொண்ட அறிஞரான இவர், இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியம் குறித்த நுணுக்கமான புரிதலையும் கொண்டுள்ளார். கன்னடம், சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி, தெலுங்கு, தமிழ், இந்தி, கிரேக்கம், லத்தீன், இத்தாலி உள்ளிட்டவை அவர் அறிந்த மொழிகளுள் சிலவாகும்.




## பத்ம பூஷன்




### பகத் சிங் கோஷியாரி

உத்தராகண்டில் 'பகத் தா' என்று அன்புடன் அழைக்கப்படும் பகத் சிங் கோஷியாரி, ஒரு புகழ்பெற்ற சமூக சேவகர், கல்வியாளர், பத்திரிகையாளர், தேசியவாதத் தலைவர் ஆவார். அவர் தமது வாழ்நாளைப் பொதுச் சேவைக்கும், சமுதாயத்தின் ஏழை, நலிந்த பிரிவினரின் மேம்பாட்டிற்கும் அர்ப்பணித்துள்ளார். உத்தராகண்டின் பாகேஷ்வர் மாவட்டத்தில் உள்ள பாலந்துரா கிராமத்தில் 1942 ஜூன் 17 அன்று பிறந்த கோஷியாரி, 1964–ல் ஆங்கில இலக்கியத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். அவர் தமது தொழில்முறை வாழ்க்கையை விரிவுரையாளராகத் தொடங்கினார், ஆனால் பின்னர் தன்னை முழுமையாகக் கல்வி, சமூக சேவைத் துறைகளில் அர்ப்பணித்துக் கொண்டார். 1997–ல், அவர் உத்தரப் பிரதேச சட்ட மேலவையின் உறுப்பினரானார். உத்தராகண்ட் மாநிலம் உருவானதைத் தொடர்ந்து, அவர் அம்மாநிலத்தின் முதலாவது அமைச்சரவையில் கேபினட் அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர் மாநில முதலமைச்சரானார். அவர் நாடாளுமன்ற, மாநிலங்களவை, மக்களவை ஆகிய இரண்டிலும் உறுப்பினராகவும், மகாராஷ்டிராவின் ஆளுநராகவும், கூடுதல் பொறுப்புடன் கோவாவின் ஆளுநராகவும் பணியாற்றியுள்ளார்.




## பத்மஸ்ரீ

- ஹரிமாதவ் முகோபாத்யாய் (மரணத்திற்குப் பின்)
- டாக்டர் ஏ. இ. முத்துநாயகம்
- சத்யநாராயண் நந்தலால் நுவால்
- கே. பழனிவேல்
- தர்மிக்லால் சுனிலால் பாண்டியா
- கைலாஷ் சந்திர பந்த்
- கரிமெல்ல பாலகிருஷ்ண பிரசாத் (மரணத்திற்குப் பின்)
- பேராசிரியர் (டாக்டர்) ராஜேந்திர பிரசாத்
- டாக்டர் குடுரு வெங்கட ராவ்
- தீபிகா ரெட்டி
- டாக்டர் பாலகொண்டா விஜய் ஆனந்த் ரெட்டி
- ஹரிச்சரண் சாய்கியா
- பேராசிரியர் வெம்பட்டி குடும்ப சாஸ்திரி
- பேராசிரியர் ஷ.ஃபி ஷெளக்
- பல்தேவ் சிங்
- யும்னம் ஜத்ரா சிங் (மரணத்திற்குப் பின்)
- டாக்டர் அசோக் குமார் சிங்
- சிவசங்கரி
- டாக்டர் ஆர். ஸ்ரீதர்
- பேராசிரியர் ஷ்யாம் சுந்தர்
- டாக்டர் எஸ். ஜி. சுசிலம்மா
- என்.சுவாமிநாதன்
- டாக்டர் கேவல் கிருஷ்ணன் தக்ரால்
- டாக்டர் கோபால் ஜி திரிவேதி (மறைவுக்குப் பிந்தைய விருது)
- அர்விந்த் வைத்யா
- பேராசிரியர் ஜூசர் வாசி
- டாக்டர் நாராயண் வியாஸ்
- ஹாலி வார்
- பேராசிரியர் கம்பீர் சிங் யோன்சோன்



## பத்ம பூஷன்





### உதய் சுரேஷ் குமார் கோடக்

இந்தியாவின் முன்னணி வங்கியாளர்களில் ஒருவரும், நிதிச் சேவைகள் துறையின் முன்னோடியுமான உதய் சுரேஷ் குமார் கோடக், இந்தியாவின் முதன்மையான தனியார் வங்கிகளில் ஒன்றை நிறுவுவதில் முக்கியப் பங்காற்றினார். 1959 மார்ச் 15 அன்று பிறந்த கோடக், 1985–ல் கோடக் மஹிந்திரா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தை நிறுவினார். அந்நிறுவனம் பின்னர் முதலீட்டு வங்கிச் சேவை, பங்குத் தரகு, காப்பீடு, கார் நிதி, பரஸ்பர நிதி போன்ற சேவைகளை உள்ளடக்கித் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தியது. மார்ச் 2003–ல், அது கோடக் மஹிந்திரா வங்கியாக உருமாறியது. இதன் மூலம், ரிசர்வ் வங்கியிடமிருந்து வங்கி உரிமம் பெற்ற இந்தியாவின் முதல் வங்கி சாரா நிதி நிறுவனம் என்ற பெருமையை அது பெற்றது. உதய் சுரேஷ் குமார் கோடக், வங்கியின் விரிவாக்கத்திற்குத் தலைமை வகித்தார். மேலும் 2014–ல் ஐஎன்ஜி வைஸ்யா வங்கியைக் கையகப்படுத்தியதன் மூலம் அதன் நிலையை மேலும் வலுப்படுத்தினார். இந்தியாவின் வங்கி, நிதி ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். அவர் பல முக்கிய அமைப்புகளுக்குத் தலைமை வகித்து வருகிறார். இந்தியா – இங்கிலாந்து நிதி கூட்டமைப்பின் இணைத் தலைவராகவும், சிங்கப்பூர் அரசு முதலீட்டுக் கழகத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் அவர் பணியாற்றி வருகிறார். அவர் டிசம்பர் 2023 வரை சிங்கப்பூர் நிதி ஆணையத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவில் பணியாற்றியுள்ளதுடன் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) தலைவராகவும் இருந்துள்ளார்.

### டாக்டர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி

டாக்டர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி, நாற்பது ஆண்டுகளுக்கும் அதிக அனுபவமுள்ள ஒரு புகழ்பெற்ற இரைப்பை, குடல் மருத்துவ நிபுணர் ஆவார். தமிழ்நாட்டின் கள்ளிப்பட்டி கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் 1949 மார்ச் 15 அன்று பிறந்த டாக்டர் பழனிசாமி, 1972–ல் மைசூர் பல்கலைக்கழகத்தில் எம்பிபிஎஸ் பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து, 1981–ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் இரைப்பை, குடல் மருத்துவத்தில் டிஎம் பட்டம் பெற்றார். 1986–ல், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இரைப்பை, குடல் மருத்துவத் துறையை நிறுவினார். வட சென்னையின் நலிந்த மக்களுக்குச் சேவை செய்வதில் தன்னை அர்ப்பணித்து, 2000 வரை அத்துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். அவர் குறிப்பாக ஏழை, சமூகத்தின் விளிம்புநிலை மக்களுக்கான சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, சென்னையில் உள்ள ராமகிருஷ்ணா மடயா மருத்துவமனையில் தன்னார்வ சேவையாற்றினார். தமது சொந்த கிராமமான கள்ளிப்பட்டியில் மருத்துவ முகாம்களையும் ஏற்பாடு செய்தார். அத்துடன் அவர் அந்த கிராமத்தில் ஒரு பாலம், ஒரு துணை மின் நிலையம், ஆரம்ப சுகாதார மையத்திற்கான ஒரு புதிய கட்டடம், நிலத்தடி நீரை நிரப்புவதற்கான தடுப்பணைகள் உள்ளிட்ட அத்தியாவசிய உள்கட்டமைப்புகளின் மேம்பாட்டுக்குப் பங்களித்தார். மருத்துவத் துறைக்கு அவர் செய்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, அவருக்கு 2007–ல் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.




## பத்ம பூஷன்





### பேராசிரியர் விஜய் குமார் மல்ஹோத்ரா (மறைவுக்குப் பின்)

பேராசிரியர் விஜய் குமார் மல்ஹோத்ரா புகழ்பெற்ற இந்திய அரசியல்வாதியாகவும், கல்வியாளராகவும், விளையாட்டு நிர்வாகியாகவும் திகழ்ந்தார். பேராசிரியர் மல்ஹோத்ரா 1931 டிசம்பர் 3– ல், லாகூரில் பிறந்தார். அவர் இந்தி இலக்கியத்தில் உயர் கல்வி பயின்று, கவிஞர் சோகன்லால் திவேதி குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். அவர் தில்லியில் உள்ள பிஜிடிஏவி கல்லூரியில் சுமார் 36 ஆண்டுகள் கல்வி கற்பித்தார். அவர் ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கம், அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, அதன் மூலம் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 1967– ல், தமது 35– ம் வயதில், தில்லியின் இளைய முதன்மை நிர்வாக கவுன்சிலர் ஆனார். ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1999–ல், முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கை ஒரு தேர்தலில் அவர் தோற்கடித்தார். விளையாட்டு நிர்வாகத்திற்கான அவரது பங்களிப்பும் சிறப்பானது; அவர் இந்திய வில்வித்தை சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார், அந்த விளையாட்டுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத்தர உதவினார். வீட்டுவசதி, கல்வி, விளையாட்டு, குடிசைப் பகுதி மறுவாழ்வு போன்ற துறைகளில் அவரது பங்களிப்புகள் தில்லியின் வளர்ச்சியில் ஆழமான முத்திரையைப் பதித்தன. அவர் 2025, செப்டம்பர் 30– ல் காலமானார்.

### பியூஷ் பாண்டே (மரணத்திற்குப் பின்)

பியூஷ் பாண்டே விளம்பரத் துறையில் மிகுந்த மாற்றம் தரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். பல தசாப்தங்களாக, அவர் இந்திய விளம்பரத் துறையில் ஒரு முக்கிய ஆளுமையாக உருவெடுத்தார். அவரது செல்வாக்கு வெறும் படைப்பாற்றலுக்கு அப்பால் அவரது தொலைநோக்குப் பார்வை, தொழில் துறைத் தலைமைத்துவம், கலாச்சார நுணுக்கங்கள் குறித்த ஆழ்ந்த புரிதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவடைந்தது. 1955 செப்டம்பர் 5– ல் பிறந்த பாண்டே, தமது வாழ்க்கை முழுவதும் எண்ணற்ற புகழ்பெற்ற விளம்பரப் பிரச்சாரங்களுக்குத் தலைமை தாங்கினார். போலியோ ஒழிப்புக்கான 'தோ பூந்த் ஜிந்தகி கி' 'மைலே சுர் மேரா தும்ஹாரா' போன்ற பிரச்சாரங்கள் வெறும் விளம்பரங்களாக மட்டுமின்றி, அவை கலாச்சாரச் சின்னங்களாக உருவெடுத்தன. அவரது படைப்பாற்றல் இந்திய விளம்பரத் துறைக்கு ஒரு தனித்துவ அடையாளத்தை வழங்கியது. அவருக்கு 2016–ல் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அவர் 2025 அக்டோபர் 24– ல் காலமானார். அவரது பணியும் தொலைநோக்குப் பார்வையும் எதிர்காலச் சந்ததியினருக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும். மேலும், அவர் இந்திய விளம்பர உலகின் உண்மையான முன்னோடியாக என்றென்றும் நினைவுகூரப்படுவார். தொடர்ந்து 14 ஆண்டுகளாக, முன்னணி வணிக நாளிதழான 'தி எகனாமிக் டைம்ஸ்' அவரை இந்தியாவின் மிகவும் செல்வாக்கு மிக்க விளம்பர மனிதராக அறிவித்தது. 800–க்கும் அதிகமான தேசிய, சர்வதேச விருதுகளைப் பெற்ற அவர், விளம்பர உலகில் அதிக விருதுகளைப் பெற்ற இந்தியர் ஆவார்.



பிரதமரின் நிகழ்ச்சியைப் பார்க்க இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

# ஐரோப்பாவிலிருந்து வளைகுடா வரை: இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கின் வெளிப்பாடு

உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பு விரிவடைந்து வரும் நிலையிலும், மாறிவரும் புவிசார் அரசியல் சூழல்களுக்கு மத்தியிலும், பிரதமர் நரேந்திர மோடியின் ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்கான பயணம், இந்தியாவின் புதிய, உலகளாவிய உத்தியின் ஒரு சக்திவாய்ந்த செயல் விளக்கமாக அமைந்துள்ளது. எரிசக்திப் பாதுகாப்பு, பசுமைத் தொழில்நுட்பம் முதல் பாதுகாப்பு ஒத்துழைப்பு, முதலீடு, புதிய கண்டுபிடிப்பு, உத்திசார்ந்த கூட்டாண்மை வரையிலான துறைகளை உள்ளடக்கிய இந்தப் பயணம், இந்தியாவின் பன்முகத் தேசிய நலன்களுக்குப் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. உலகம் ஒரு புதிய அதிகாரச் சமநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையிலும், இந்தியா தம்மை ஒரு நம்பகமான, தீர்க்கமான, வளர்ச்சி சார்ந்த உலகளாவிய பங்காளியாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் வேளையிலும் இந்தப் பயணம் நடைபெற்றுள்ளது.

ஐந்து நாடுகள் சுற்றுப்பயணத்தின் போது (மே 15 முதல் மே 20 வரை), பிரதமர் நரேந்திர மோடி, தனது சகாக்களுடன் இருதரப்பு, உலகளாவிய பிரச்சனைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தினார். மாறிவரும் உலகளாவியச் சூழலின் பின்னணியில் நடத்தப்பட்ட இந்த உயர்நிலை ஆலோசனைகள், இந்தியாவின் பொருளாதார, உத்திசார்ந்த, உலகளாவிய நலன்கள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது. இந்த சந்திப்புகளில் எரிசக்திப் பாதுகாப்பு, பசுமை வளர்ச்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பு, தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு, டிஜிட்டல் கூட்டாண்மை, நீர் மேலாண்மை, முதலீடு, வர்த்தக விரிவாக்கம் போன்ற தலைப்புகளில் விரிவான விவாதங்கள் நடைபெற்றன. ஐக்கிய அரபு அமீரகத்துடனான சந்திப்புகள் மூலம் எரிசக்தி, முதலீடு தொடர்பான உறவுகள் புத்துயிர் பெற்ற அதே வேளையில், ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்புகளில் இந்தியா ஒரு நம்பகமான பங்காளியாக தமது பங்களிப்பை மேலும் உறுதிப்படுத்தியது. மேலும், இந்த சுற்றுப்பயணம் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை மையப்படுத்தி, உலக அமைப்பில் நாட்டின் வளர்ந்து வரும் செயல்திறனையும் தலைமைத்துவத்தையும், எடுத்துக்காட்டியுள்ளது.

# இந்தியா– யுஏஇ உறவுகள்.

பிரதமர் நரேந்திர மோடியும், ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யானும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர். பிரதமர் மோடி, ஐக்கிய அரபு அமீரகம் மீதான தாக்குதல்களைக் கண்டித்ததோடு, அந்நாட்டுடன் ஒருமைப்பாட்டில் நிற்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தினார். இதன்மூலம், அதன் தலைமைக்கும் மக்களுக்கும் இந்தியாவின் ஆதரவைத் தெரிவித்தார். ஹோர்முஸ் நீரிணையில் பாதுகாப்பான, தடையற்ற கடல்வழிப் பாதைகளைப் பராமரிப்பதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியது. இது பிராந்திய அமைதிக்கும், நிலைத்தன்மைக்கும், எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மிகவும் முக்கியமானது என்று இந்தியா நம்புகிறது. இந்தியா–ஐக்கிய அரபு அமீரக எரிசக்தி கூட்டாண்மை தொடர்ந்து வலுப்பெற்று வருவது குறித்து இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர். அதனை மேலும் மேம்படுத்துவதற்காக புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் ஒப்புக்கொண்டனர்.

இந்தச் சூழலில், இந்தியன் ஸ்ட்ராடஜிக் பெட்ரோலியம் ரிசர்வ்ஸ் நிறுவனம்– அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் இடையேயான உத்திசார்ந்த ஒத்துழைப்பு ஒப்பந்தமும் வரவேற்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவின் உத்திசார்ந்த பெட்ரோலிய இருப்புக்களுக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் பங்களிப்பு 30 மில்லியன் பீப்பாய்களாக அதிகரிக்கப்படும். கூடுதலாக, இரு நாடுகளும் இந்தியாவில் உத்திசார்ந்த எரிவாயு இருப்புகளை நிறுவுவதில் ஒத்துழைக்கும். ஐக்கிய அரபு அமீரகத்தை தளமாகக் கொண்ட நிறுவனங்கள் இந்தியாவில் 5 பில்லியன் டாலர் முதலீடு செய்வதாக அறிவிக்கப்பட்டதையும் இரு தலைவர்களும் வரவேற்றனர். இதில், சம்மான் தலைநகரில் எமிரேட்ஸ் என்பிடி நிறுவனம் ஆர்பிஎல் வங்கியில் 3 பில்லியன் டாலர் முதலீடும், அபுதாபி முதலீட்டு ஆணையம் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் 1 பில்லியன் டாலர் முதலீடும், இன்டர்நேஷனல் ஹோல்டிங் கம்பெனி 1 பில்லியன் டாலர் முதலீடும் அடங்கும்.


**இந்தியா– இத்தாலி**

இத்தாலிப் பிரதமர் ஜார்ஜியா மெலோனி அழைப்பின் பேரில், பிரதமர் நரேந்திர மோடி இத்தாலிக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார். இது இருதரப்பு உறவுகளுக்குப் புத்துயிர் அளித்தது. இரு தலைவர்களும் இந்தியா–இத்தாலி உறவுகளை "சிறப்பு உத்திசார் கூட்டாண்மை" என்ற நிலைக்கு உயர்த்த முடிவு செய்தனர். மேலும், அரசியல் உரையாடல், பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடு, போக்குவரத்து, அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்பு, புத்தொழில் நிறுவனங்கள், செயற்கை நுண்ணறிவு, சூப்பர் கம்ப்யூட்டிங், விண்வெளி, பாதுகாப்பு, கலாச்சாரம், கல்விப் பரிமாற்றங்கள் போன்ற துறைகளில் ஒத்துழைக்க அவர்கள் தீர்மானித்தனர். தற்போதைய உலகளாவிய யதார்த்தங்களுக்கு ஏற்ப ஐக்கிய நாடுகள் சபையை சீரமைக்க, அவசர சீர்திருத்தங்கள் தேவை என்பதை இரு தலைவர்களும் வலியுறுத்தினர். மேலும், ஹோர்முஸ் நீரிணை வழியாக சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை மீட்கவும், உலகளாவிய விநியோகங்களின் இயல்பான செயல்பாட்டை உறுதி செய்யவும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். இரு தலைவர்களும் 2029–க்குள் இருதரப்பு வர்த்தகத்தை 20 பில்லியன் யூரோக்களாக விரிவுபடுத்த இலக்கு நிர்ணயித்தனர். 2027–ஐ "இத்தாலிக்கும் இந்தியாவுக்கும் இடையே கலாச்சார, சுற்றுலா ஆண்டாக" கொண்டாட அவர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

**இந்தியா–டென்மார்க் இருதரப்பு ஒத்துழைப்பு**

ஆஸ்லோவில் நடைபெற்ற இந்தியா – நார்டிக் 3– வது உச்சி மாநாட்டின்போது பிரதமர் நரேந்திர மோடியும், டென்மார்க்கின் தற்காலிகப் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சனும் சந்தித்தனர். இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கும் இந்தியா–டென்மார்க்



பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## ராயல் நார்வே உயரிய விருது வழங்கப்பட்டது.



- ஆஸ்லோவில் நடைபெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடிக்கு, நார்வே மன்னர் ஐந்தாம் ஹரால்ட் 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ராயல் நார்வேஜியன் ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது வழங்கினார்.
- வெளிநாட்டுத் தலைவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருது, நார்வேயின் மிக உயர்ந்த கௌரவமாகும். நார்வே மற்றும் மனிதசமூகத்தின் நலனுக்காக ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி இது வழங்கப்படுகிறது.
- இந்தியாவுக்கும் நார்வேக்கும் இடையேயான வரலாற்றுச் சிறப்புமிக்க நட்புறவுக்கு இந்த கௌரவத்தை அர்ப்பணித்த பிரதமர் மோடி, இது இரு நாட்டு மக்களிடையே பகிரப்படும் அசைக்க முடியாத பிணைப்பு, நம்பிக்கை மற்றும் அன்புக்கு ஒரு மரியாதை என்று விவரித்தார்.

பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண
கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

பசுமை உத்திசார்ந்த கூட்டாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இரு தலைவர்களும் வரவேற்றனர். புதிய, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், தகவல் தொடர்பு, மேம்பட்ட ஆராய்ச்சி, புத்தொழில் நிறுவனங்கள், கல்விப் பரிமாற்றங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்தன. நீர் துறையில், வாரணாசியில் தூய்மையான ஆறுகளுக்கான 'நவீன ஆய்வகம்' ஒன்றை நிறுவுவது தொடர்பாக இந்தியாவுக்கும் டென்மார்க்குக்கும் இடையே வெற்றிகரமான ஒத்துழைப்பை இரு தலைவர்களும் குறிப்பிட்டனர்.

இந்தியா–நார்வே இருதரப்பு பேச்சுவார்த்தைகள்.

பிரதமர் நரேந்திர மோடி, நார்வே பிரதமர் ஜோனாஸ் கார் ஸ்டோரேயுடன் ஆஸ்லோவில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். இரு தலைவர்களும் இந்தியா – நார்வே உறவுகளை ஆய்வு செய்தனர்.

வர்த்தகம், முதலீடு, பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தங்கள், எரிசக்தி மாற்றம், நீலப் பொருளாதாரம், கடல்சார் நிர்வாகம், ஆராய்ச்சி, உயர்கல்வி, ஆர்க்டிக், துருவ ஒத்துழைப்பு, விண்வெளி, இரு நாடுகளுக்கும் இடையிலான திறன் பரிமாற்றம் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. நிலையான வளர்ச்சி, பசுமை முன்னேற்றத்திற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில், இரு நாடுகளும் தங்கள் உறவை 'பசுமை உத்திசார் கூட்டாண்மை' நிலைக்கு உயர்த்த ஒப்புக்கொண்டன. 2030–க்குள் இந்தியாவுக்கும் நார்வேக்கும் இடையேயான தற்போதைய வர்த்தக மதிப்பை இரட்டிப்பாக்கும் நோக்கத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர். இந்தியாவில் 10 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், டிஇபிஏ ஒப்பந்தத்தின் கீழ் 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டு உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்காக, பல்வேறு துறைகளில் ஆற்றல்மிக்க கூட்டாண்மைகளை உருவாக்கவும் வணிகப் பிரதிநிதிகளை ஊக்குவித்தனர்.

2026 ஜூன் மாதம் பிரான்சில் நடைபெறவுள்ள 'இந்தியா



## பிரதமர் மோடிக்கு அக்ரிகோலா பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- ரோமில் உள்ள ஐநா உணவு, வேளாண் அமைப்பின் தலைமையகத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு 2026–க்கான மதிப்புமிக்க அக்ரிகோலா பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- உணவுப் பாதுகாப்பு, நீடித்த வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு ஆகிய துறைகளில், இந்தியாவிலும் உலக அளவிலும் அவர் ஆற்றிய சிறப்பான தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டது.
- பிரதமர் மோடி இந்த கௌரவத்தை இந்திய விவசாயிகளுக்கும் இந்திய வேளாண் அறிவியல் சமூகத்திற்கும் அர்ப்பணித்தார்.

பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண
கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.




## 'மேக் இன் இந்தியா' திட்டத்திலிருந்து உலகளாவிய கூட்டாண்மை வரை.

ஆஸ்லோவில் நடைபெற்ற இந்தியா–நார்வே வர்த்தக, ஆராய்ச்சி உச்சிமாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இந்த உச்சிமாநாட்டில் 50–க்கும் அதிகமான நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், நார்வே, இந்தியாவைச் சேர்ந்த வர்த்தக, ஆராய்ச்சி சமூகங்களைச் சேர்ந்த 250–க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த வர்த்தக, ஆராய்ச்சி உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, ஆஸ்லோ முழுவதும் உள்ள பல்வேறு இடங்களில் நான்கு வட்டமேசை அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நீலப் பொருளாதாரம், கப்பல் கட்டுமானம், பசுமை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரத் தொழில்நுட்பம், முக்கிய கனிமங்கள், புத்தொழில் நிறுவனங்கள் போன்ற முக்கியத் துறைகளில் இந்தியாவில் தங்கள் முதலீடுகளை அதிகரிக்குமாறு நார்வே முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இரு நாடுகளின் வர்த்தக சமூகங்களும் புதிய கூட்டாண்மைகளை உருவாக்கவும், ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை அடையாளம் காணவும், பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும் பிரதமர் அழைப்பு விடுத்தார். எரிசக்தி, துறைமுகங்கள், சுகாதாரம், வேளாண்மை, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய டச்சு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் பிரதமர் நரேந்திர மோடி, கலந்துரையாடினார். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் டச்சு நிறுவனங்கள் காட்டிவரும் ஆர்வத்தைப் பிரதமர் மோடி பாராட்டினார். இந்திய அரசின் சீர்திருத்த செயல்திட்டத்தை தொழில்துறை தலைவர்கள் பாராட்டி, இந்தியாவுக்கான தங்களின் திட்டங்களைப் பகிர்ந்துக் கொண்டனர்.

### சுவீடன் வர்த்தகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

பிரதமர் மோடி சுவீடன் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இந்தியா–சுவீடன் கூட்டாண்மை தற்போது வெறும் பொருளாதார உறவு மட்டுமின்றி, கருத்துக்கள், தொழில்நுட்பம், புதுமை, கூட்டு உருவாக்கம் ஆகியவற்றின் உறவு என்று அவர் கூறினார்.

சீர்திருத்தம், வலுவான உள்நாட்டுத் தேவை, டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, உற்பத்தி விரிவாக்கம், அடுத்த தலைமுறை உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றால் உந்தப்பட்ட இந்தியாவின் விரைவான பொருளாதார மாற்றத்தை பிரதமர் எடுத்துரைத்தார். 'மேக் இன் இந்தியா', தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், தேசிய முக்கிய கனிமங்கள் இயக்கம் போன்ற முயற்சிகளின் கீழ் இந்தியாவில் தங்கள் இருப்பை வலுப்படுத்த சுவீடன் நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

### ஐரோப்பிய தொழில்துறை வட்டமேசை மாநாடு

கோத்தன்பர்கில் நடைபெற்ற ஐரோப்பிய தொழில்துறை வட்டமேசை மாநாட்டில், பிரதமர் மோடி இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான வளர்ந்து வரும் உத்திசார்ந்த ஒருங்கிணைப்பை வலியுறுத்தினார். இந்தியா–ஐரோப்பிய ஒன்றிய உறவுகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தை அவர் வரவேற்றார். தற்போது, முதலீடு, புதிய கண்டுபிடிப்பு, உற்பத்தி ஆகியவற்றில் உலகின் மிகவும் ஈர்ப்புமிக்க இடங்களில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. நெகிழ்வான விநியோகச் சங்கிலிகளை உருவாக்க இந்தியாவும் ஐரோப்பாவும் இணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். இந்தியாவின் இளமையான, திறமையான தொழிலாளர் சக்தியை எதிர்கால உலகளாவிய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய பலமாக அவர் முன்னிலைப்படுத்தினார்.

இன்னோவேட்ஸ் 2026' நிகழ்வில் பங்கேற்க இந்தியா, நார்வேக்கு அழைப்பு விடுத்தது. இரு நாடுகளுக்கும் இடையே ஒரு புத்தாக்க புதிய கண்டுபிடிப்பு மையத்தை நிறுவவும், ஒரு பசுமைப் புத்தாக்க ஹேக்கத்தானை நடத்தவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இரு தலைவர்களும் பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் உறுதியாகக் கண்டித்தனர்.

**இந்தியாவுக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள்.**

பிரதமர் நரேந்திர மோடி, நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டனுடன் அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் (காட்ஹூயிஸ்) பேச்சுவார்த்தை நடத்தினார். இரண்டு பிரதமர்களும் இந்தியா–நெதர்லாந்து உறவை வலுப்படுத்துவது குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர்.



## பிரதமர் மோடியை சுவீடன் கௌரவித்தது.

- சுவீடனில் நடைபெற்ற சிறப்புமிக்க விழாவில், சுவீடனின் பட்டத்து இளவரசி விக்டோரியா, பிரதமர் நரேந்திர மோடிக்கு 'ராயல் ஆர்டர் ஆஃப் தி போலார் ஸ்டார், டிகிரி கமாண்டர் கிராண்ட் கிராஸ்' என்ற விருதை வழங்கினார்.
- இது 18– ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட, ஸ்வீடனின் மிகப் பழமையான மதிப்புமிக்க கௌரவங்களில் ஒன்றாகும்.
- இந்த விருது, சிறப்பான பொதுச் சேவைக்கான பங்களிப்புகளுக்காகவும், சுவீடனுடனான உறவுகளை வலுப்படுத்தியதற்காகவும் வெளிநாட்டு அரசுத் தலைவர்களுக்கு சுவீடனால் வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவத்தைக் குறிக்கிறது.
- இந்த கௌரவத்தை இந்தியாவின் 1.4 பில்லியன் மக்களுக்கும், இந்தியாவுக்கும் சுவீடனுக்கும் இடையேயான நீடித்த நட்புறவுக்கும் பிரதமர் மோடி அர்ப்பணித்தார்.





## சோழர்கால செப்பேடுகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன

பிரதமர் நரேந்திர மோடி, நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டன் ஆகியோர் முன்னிலையில், 11– ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்கால செப்பேடுகளை லைடன் பல்கலைக்கழக நூலகம் இந்திய அரசிடம் திரும்ப ஒப்படைத்தது. 21 பெரிய தகடுகள், 3 சிறிய தகடுகளை உள்ளடக்கிய இந்த சோழர்கால செப்பேடுகள், 11–ம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் வெளியிடப்பட்ட அரச சாசனங்கள் ஆகும். இந்த செப்பேடுகளில் தமிழ், சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட உரைகள் இடம்பெற்றுள்ளன.


இரு நாடுகளுக்கு இடையேயான பகிரப்பட்ட மாண்புகள் மற்றும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ந்து வரும் ஒத்துழைப்பின் காரணமாகவும், இருதரப்பு உறவை "உத்திசார்ந்த கூட்டாண்மை" நிலைக்கு உயர்த்த தலைவர்கள் முடிவு செய்தனர். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, வளர்ந்து வரும் முக்கிய தொழில்நுட்பங்கள், கடல்சார் துறை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, உத்திசார்ந்த கூட்டாண்மைக்கான லட்சியமிக்க ஒரு செயல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒத்துழைக்குமாறும் இரு தலைவர்களும் அழைப்பு விடுத்தனர்.

இரு நாட்டுப் பிரதமர்களும் 'திறன்சார்ந்த கூட்டாண்மை', உயர்கல்வியில் ஒத்துழைப்பை வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகளுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். இது தொடர்பாக, நாளந்தா பல்கலைக்கழகத்திற்கும் க்ரோனிங்கன் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதிகாரபூர்வ பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி, வர்த்தகம், போக்குவரத்து, நீர், வேளாண்மை, சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் ஆகிய துறைகளில் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின்.




**Narendra Modi**
@narendramodi

Different parts of India are witnessing soaring temperatures and the challenges that come with it. This heat is harsh on all of us and I urge you all to take as many precautions as possible. Please stay hydrated, keep water with you when stepping out. Offer a glass of water to others. In weather like this, such kindness goes a long way.



**Rajnath Singh**
@rajnathsingh

डिफेंस कॉरिडोर के माध्यम से उत्तर प्रदेश, भारत के रक्षा क्षेत्र को आत्मनिर्भर बना रहा है। यहाँ लखनऊ में ब्रह्मोस का भी निर्माण हो रहा है। और भी कई तरह से उत्तर प्रदेश, डिफेंस मैन्युफैक्चरिंग को मज़बूत कर रहा है।



**Amit Shah**
@AmitShah

BSF के पराक्रम को जन-जन तक पहुँचाने के लिए गुजरात में एक सेंटर बना। यहाँ के फीडबैक फॉर्म पर कई माँओं ने लिखा - हमारे बच्चे BSF में जाएँ तो हमें गर्व होगा।




**Nitin Gadkari**
@nitin_gadkari

For decades, street vendors powered our cities but remained unseen in policy and finance. Under the visionary leadership of Prime Minister Shri @narendramodi Ji, PM SVANidhi has transformed lives—providing identity, collateral-free credit, and digital inclusion.



**Jagat Prakash Nadda**
@JPNadda

NCD स्क्रीनिंग के तहत अब तक 36 करोड़ लोगों की Oral Cancer, 17 करोड़ महिलाओं की Breast Cancer, 9 करोड़ महिलाओं की Cervical Cancer तथा 42-42 करोड़ लोगों की Hypertension और Diabetes के लिए स्क्रीनिंग की जा चुकी है।



**Gajendra Singh Shekhawat**
@gssjodhpur

भारत अब सुपर 'सोलर'-पॉवर भी !

भारत वर्ष 2025 में वार्षिक सोलर क्षमता वृद्धि के मामले में अमेरिका को पीछे छोड़ दुनिया का दूसरा सबसे बड़ा सोलर मार्केट बन गया है। एक ही वर्ष में लगभग 50 GW नई सौर क्षमता जोड़ी गई।

# India, Myanmar to boost ties in critical minerals, rare earths

**Asian News International**
New Delhi

India and Myanmar on Monday agreed to maintain close engagement on matters related to critical minerals and rare earths, with both countries aiming to take bilateral cooperation forward in these strategic sectors.

Foreign Secretary Vikram Misri, in a special briefing on the visit of Myanmar President U Min Aung Hlaing to India, said that issues related to critical minerals and rare earths were discussed between the two sides during the meeting between Prime Minister Narendra Modi and the Myanmar President.

"Issues related to critical minerals and rare earths did come up during the discussion today. This has been a subject of bilateral discussion for some time. Today as well, there was an understanding that the two governments will continue to stay in touch on these issues and take forward cooperation in these areas," Misri said.



Prime Minister Narendra Modi with Myanmar President U Min Aung Hlaing in New Delhi on Monday PTI

**CAPACITY BUILDING**

On defence collaboration, the Foreign Secretary highlighted that India's partnership with Myanmar has largely focused on training, capacity building, and institution strengthening. He noted that the training of Myanmar troops is dedicated to UN Peacekeeping.

"This has been a focus for several years now, and mostly the defence cooperation with Myanmar focuses on training, capacity building, and institution building. A very important part of the training is in the context of UN Peacekeeping," Misri said.

# 'India has emerged as global leader in big cat protection'

Wildlife conservation requires not only public funding, but also sustained institutional collaboration, says Union Environment Minister Bhupender Yadav

INDIA has established itself as a global leader in wildlife conservation, particularly through the success in saving its big cats, said Union Minister of Environment, Forest and Climate Change **Bhupender Yadav**. In an interview with **Jitendra Choubey**, the minister discussed wildlife issues like India's leadership in global efforts to conserve big cats, the use of technology, threat of trans-boundary wildlife diseases and the importance of raising corporate funds for conservation efforts. **Excerpts:**

**What is India's role in the International Big Cat Alliance?**

The International Big Cat Alliance (IBCA), initiated by Prime Minister Narendra Modi, envisions a scenario where big cats can thrive in healthy ecosystems, symbolising harmony between nature and humanity. The IBCA has been conceptualised as a treaty based intergovernmental platform, led by India, to strengthen global cooperation for the conservation of the seven major big cats—tiger, lion, leopard, snow leopard, cheetah, jaguar and puma.

The IBCA's global vision provides a strategic roadmap built on five core pillars of knowledge exchange, science-based conservation of big cats and their habitats, capacity building, awareness and outreach, and resource mobilisation. This vision seeks to integrate biodiversity conservation with climate resilience, ecosystem restoration, sustainable livelihoods and international cooperation.

India has positioned itself as a global leader in conservation diplomacy through the launch of the IBCA. India's experience in tiger and cheetah recovery, lion and snow leopard conservation, habitat management and community participation provides a strong foundation for global cooperation.

Verbatim

Through the IBCA, India is facilitating South-South cooperation, capacity building, technology transfer and innovative conservation financing to support 96 big cat range countries across Asia, Africa and Latin America.

**What is the state of IBCA member countries?**

The IBCA has 25 member countries—13 in Asia, 12 in Africa and 5 in the Americas—and five observer countries.

**Technology has become an indispensable component of wildlife conservation.**



**How India is integrating tech in conservation efforts and fixing accountability?**

Technology has become an important force multiplier in wildlife conservation. India today uses a wide range of modern tools, such as radio telemetry, satellite-based monitoring, camera traps, drones, AI-enabled analytics, M STrIPES smart patrolling systems, wildlife forensics and geospatial platforms for protection and scientific management of wildlife. They have significantly improved monitoring, protection, habitat management and rapid response systems.

At the same time, we recognise that technology systems operating in remote and dynamic field conditions can occasionally face operational limitations, signal disruptions, terrain related challenges or technical inconsistencies. India's approach is, therefore, focused on building resilient and diversified monitoring systems, rather than depending on any single technology platform. Therefore, all technological interventions are implemented through established protocols, scientific institutions, expert oversight and continuous field evaluation. Agencies such as the National Tiger Conservation Authority, Wildlife Institute of India, Forest Survey of India and state forest departments work closely to ensure standardisation, monitoring and accountability in use of these technologies.

Importantly, India is also promoting indigenous and locally adaptable conservation technologies under the broader vision of Atmanirbhar Bharat. The emphasis is on ensuring that technology remains scientifically robust, field tested, transparent and supported by community participation. Ultimately, technology is an aid to conservation, but the foundation of successful wildlife protection remains strong institutions, scientific management and human resource.

**India does not have a policy on wildlife trans-boundary disease management. Instead, risks are managed through other schemes. When can India expect single policy?**

India recognises that wildlife diseases and trans-boundary zoonotic risks are emerging as major global conservation and ecological challenges. While India addresses these issues through multiple frameworks and institutions under the broader One Health approach, significant progress is already underway towards creating a more integrated and coordinated national framework.

The government is currently working on the National Wildlife Health Policy, which aims to strengthen wildlife disease surveillance, diagnostics, outbreak preparedness, research and inter-agency coordination. The proposed framework is being developed with the involvement of institutions like the Central Zoo Authority, Wildlife Institute of India, veterinary institutions, scientific bodies and public health agencies.

At the same time, India has already established several important mechanisms, including the National One Health Mission, zoonotic disease surveillance networks, the One Health Consortium and specialised wildlife health facilities, such as the National Referral Centre for Wildlife in Junagadh.

Policy formulation on such an important issue requires scientific consultations and coordination across sectors. The objective is not just to create a policy document, but to establish a robust, science-based operational framework capable of addressing future wildlife health and trans-boundary disease challenges in an integrated manner. India is moving steadily in that direction.

**How does the government mobilise resources and partnership for wildlife conservation efforts?**

The government is adopting a multi-dimensional approach by bringing together governments, scientific institutions, local communities, corporates, multilateral agencies and conservation organisations on a common platform. Wildlife conservation today requires not only public funding, but also sustained institutional collaboration and innovative financing mechanisms.

India has significantly strengthened budgetary and institutional support through initiatives such as Project Tiger, CAMPA, Project Elephant, Integrated Development of Wildlife Habitats and species-specific conservation programmes.

Also, the government is increasingly encouraging partnerships with the corporate sector, philanthropic institutions, NGOs and international organisations. The IBCA seeks to mobilise global cooperation, technical expertise and conservation finance through partnerships with the leading conservation organisations.

India is promoting innovative financing mechanisms, such as CSR participation, carbon linked instruments and landscape-based investments. Increasingly, conservation is being linked with sustainable livelihoods, ecotourism and green skill development.

Importantly, conservation cannot just succeed through government action. It depends on building a "whole-of-society" approach, where communities, industry, youth and global partners become active participants in protecting biodiversity and ecological security.

# 'SVANidhi supports lives of countless street vendors'

PRIME MINISTER NARENDRA Modi on Monday said the PM SVANidhi scheme supporting street vendors has transformed the lives of countless hawkers by ensuring access to collateral-free credit, financial inclusion and new opportunities for growth. On completion of six years of the scheme, he said that PM SVANidhi is all about trust, dignity and empowerment.

**FE BUREAU & AGENCIES**

# Preserving cultural heritage govt's top priority, says Modi

**EXPRESS NEWS SERVICE** @New Delhi

CITING the recent repatriation of ancient Chola-era copper plates from the Netherlands, Prime Minister Narendra Modi on Sunday reiterated his government's commitment to safeguarding India's cultural heritage. Addressing the people during his monthly radio programme Mann Ki Baat, he said the government was making sustained efforts to recover and preserve the country's invaluable historical treasures.

On the return of the ancient copper plates, Modi said, "Recently I had the opportunity to visit the Netherlands in Europe. I attended several meetings there. During this time, a moment arrived that filled every Indian with pride. In a special ceremony held in the Netherlands, ancient copper plates from the Chola period were returned to India."



marily relate to King Rajendra Chola the first, fulfilling a vow made by his father, King Rajaraja Chola. They mention the donation of the village of Anaimangalam to a Buddhist monastery. These copper plates also describe the achievements of the Chola dynasty and reveal how formidable the Chola Empire's maritime power was."

Expressing his concern over the ongoing heatwave, the PM also urged citizens to take precautions and suggested simple and traditional methods of staying cool during the summer months. During the programme, he spoke about astronomy, interacted with sportspersons and highlighted wildlife conservation efforts.

Touching upon astronomy, the PM said centuries-old observatories still exist across India. "Astronomy has aroused curiosity in every generation in our country. It has inspired exploration; a lot of enthusiasm is visible in today's youth," he said.

Emphasising his government's efforts towards cultural preservation, he asserted, "Our government is continuously making efforts to preserve such priceless heritage sites of India. In this regard, an important discovery has been made in Malhar, Chhattisgarh, under the Gyan Bharatam Abhiyan.

# Mann Ki Baat: PM hails sprint icons Gurindervir, Kujur

## Urges People To Take Care Amid Heatwaves

TIMES NEWS NETWORK

**New Delhi:** PM Narendra Modi Sunday praised the country's new sprint icons Gurindervir Singh and Animesh Kujur both of whom broke national records at the recent National Senior Athletics Federation Competition in Ranchi.

In his monthly radio address, Mann ki Baat, Modi said four national records were broken in four different events. "Gurindervir Singh, Vishal TK, Tejaswin Shankar, Dev Meena, and Kuldeep Kumar — these friends set new records in different categories," PM said, congratulating the athletes.

PM interacted with Singh and Kujur during the programme and the two athletes spoke about their sporting journeys and experiences. "Look, the competition you've participa-



PM Modi also praised mango farmers and highlighted growing global exports of the fruit

specially abled individuals, have learnt swimming there. Modi said Saji started the initiative after a boat tragedy a few years ago where several students had died. PM also spoke about educator Girija Amma from Nagercoil in Tamil Nadu, who runs 15 schools, including the Jaigopal Garodia Hindu Vidyalaya in Chennai. Speaking about the summer season, PM said mangoes remain an inseparable part of Indian households and culture. He praised farmers engaged in mango cultivation and highlighted how Indian mang-

# Mango cultivation special for agri: PM

Manas Pimpalkhare
manas.pimpalkhare@livemint.com
NEW DELHI

Mango cultivation and the farmers involved in it are "very special for the agricultural economy of the country", Prime Minister Narendra Modi said in his monthly radio address 'Mann Ki Baat' on Sunday.

Highlighting the diversity of India's mangoes, Modi said the popular summer season fruit is making its way from the country's villages to

exported. India exported nearly 29,938.40 tonnes of mangoes worth $56.50 million in FY25 to destinations such as the UAE, the US, Kuwait, and Qatar, according to data cited by the Agricultural and Processed Food Product Export Development Authority (Apeda).

The prime minister also spoke on the intense summer conditions being experienced across several parts of the country. He highlighted traditional foods and drinks that can help people cope

**Modi said the popular summer season fruit is making its way**

சர்வதேச எம்எஸ்எம்இ தினம்– ஜூன் 27, 2026.

# குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் : சமூக – பொருளாதார வளர்ச்சியின் முக்கியத் தூண்

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் இந்தியாவின் பொருளாதார, சமூக வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன. இது குறைந்த மூலதனச் செலவில் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, துணை அலகுகளாகச் செயல்படுவதன் மூலம் பெரிய தொழில்களுக்கு ஆதரவளிக்கிறது. மேலும், இது கிராமப்புற, பின்தங்கிய பகுதிகளில் தொழில்மயமாக்கலை ஊக்குவிக்கிறது. சர்வதேச எம்எஸ்எம்இ தினம் ஆண்டுதோறும் ஜூன் 27– ல் கொண்டாடப்படுகிறது. மத்திய அரசின் எம்எஸ்எம்இ அமைச்சகம், அதன் பல்வேறு அமைப்புகள், நிறுவனங்களுடன் இணைந்து, இத்துறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.......



## எம்எஸ்எம்இ– க்கள்: உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல்.

- குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 31 சதவீதத்திற்கு அதிகமாகவும், ஏற்றுமதியில் 48.58 சதவீதமும் பங்களிக்கின்றன.
- நாடு முழுவதும் 32.8 கோடி மக்களின் வாழ்வாதாரம் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சார்ந்துள்ளது. 7.9 கோடிக்கும் அதிகமான நிறுவனங்கள் முறைசார் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- ஜெம், ட்ரெட்ஸ், சமாதான் போன்ற டிஜிட்டல் தளங்கள் மூலம் சந்தை அணுகலை மேம்படுத்தவும், பணம் செலுத்தும் நடைமுறைகளை விரைவுபடுத்தவும் குறு, சிறு, நடுத்தர தொழில் துறை நிறுவனங்களுக்கு உதவி செய்யப்படுகிறது.



“நமது குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், இந்தியாவின் உற்பத்தித் துறைக்கும் நமது தொழில்துறை வளர்ச்சிக்கும் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. 2020–ல், 14 ஆண்டுகளுக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வரையறையைத் திருத்தியமைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை நாங்கள் எடுத்தோம். இம்முடிவு, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்தினால், அரசு வழங்கும் சலுகைகளைப் பெறுவது நின்றுவிடும் என்ற அச்சத்தைத் திறம்பட நீக்கியது.

நரேந்திர மோடி, பிரதமர்.


NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 JUNE 16-30, 2026

RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: June 05, 2026 Pages: 36)

**EDITOR IN CHIEF**
**Dhirendra Ojha**
Principal Director General
Press Information Bureau, New Delhi

**PUBLISHER:**
**Kanchan Prasad**
Director General, on behalf of
Central Bureau Of Communication

**PUBLISHED FROM:**
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003